உ

கடவுள்துணை.

சந்தப்பிரகரணம்.

இஃது

பிறைசை

அருணாஜலசுவாமிகளால்

நூதன உரைசெய்யப்பட்டதை

காஞ்சீபுரம்

திருவேங்கடமுதலியாரது

இயற்றமிழ்விளக்கஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது,

சித்திரபானு௵

உ

ஓம்.

ஸ்ரீசற்குருவேநம.

சத்தப்பிரகரணம்.

(குருஸ்துதி,)

బ్రహ్మానందంపరమసుఖదం కేవలంజ్ఞానమూర్తిం ।ద్వం
ద్వాతీతంగగనసదృశంతత్త్వమస్యాదిలక్ష్యం । ఏకంనిత్యం
విమలమచలంసర్వధీసాక్షిభూతం । భావాతీతంత్రిగుణ
రహితంసద్గురుంతంనమామి॥ ౧

(இதனதுபொருள்,)

பிரமானந்தஸ்வரூபமாகியும்-சிரேஷ்டமானசுகத்தைக்கொடுப்பதாகியும்-நிர்விகாரமாகியும்-ஞானவடிவமாகியும் பிரபஞ்சாதீதமாகியும்-ஆகாசத்துக்குச்சமானமாகியும்-மஹாவாக்கியங்களுக்கு லட்சியார்த்தமாகியும்-ஒன்ருகியும்-நித்தியமாகியும்-நின்மலமாகியும்- அசைவற்றதாகியும்-எப்போதுஞ் சாட்சிமாத்திரமாகியும்-பாவனைகளுக்கப்பாற்பட்டதாகியும்முக்குணங்களு மில்லாததாகியுமிருக்கின்றசற் குருவைநமஸ்காரம்பண்ணுகிறேன்

(இதுவுமது)

మూకాంబికాకటాక్షాన్మోహవిహీనం గోత్రశిష్యంయో
యః ప్రకాశ్యకం శేషగిరిశర్మ శేషవేదాంతదేశికంవందే॥౧

இதனதுபொருள்,

மூகாம்பாளது கடாட்சத்தினலே சி...ன் மோக்கத்தினின்றும் விடுவித்தவராகியும் ஏகஸ்வரூபராகியுஞ்சம்ஸ்தமான உபநிடதங்களுக் காசிரியராகியுமிருக்கின்ற-சேஷகிரிசவென்னு நாமதேயத்தையுடைய வாசாரியனை நமஸ்காரம்பண்ணுகிறேன்.

ராகத்துவேஷப் பிரகரணம்,

அவையாவன்;

தன்து நித்தியானந்த சுயம்பிரகாசத்தினின் றோரறிவுசங்கற்பரூபமாகத்தோன்றிப் பகிர்முகமான விடத்துண்டான வறிவறியாமையே பிரகிருதிமகதத்துவமெனவும்-அவற்றினின்றும் விகற்பித்தெழாநின்றவறிவினறிவறியாமையே மாயை யவித்தையெனவும்-அவற்றிற்பிரதிபலித்த ஜிவேஸ்வரசங்கற்பவிகற்பமேஞானமுதலி..விருபத்தைந்து தத்துவங்களெனவும்அவற்றினின்று ...கற்பரூபமாகப் பரிணமித்ததே பாஞ்சபூத பதிக் ... -அவற்றைச்சங்கற்பவிகற்பரூபமான சித்தவி...கிற ராகத்துவேஷங்களாலனுபவிக்குஞ் ருத்தியால்...

சகதுக்கங்களைவிடயமெனவுந்தோத்திய- அத்தியாரோ
பத்தை அபவாதத்தால் முன்னுண்டான முறைமைப்ப
டியடக்கித்தனது நிசானந்தத்தை வெளிப்படுத்தும்மித்
தமருளே திருமேனியாக வெழுந்தருளியசேஷாத்திரி
சிவனென்னுஞானாசாரியர்-சாகற்புவிகற்பத்தினால் வி
ருப்புண்டாய்-அதனால்விடயங்களிற்சுழலாநின்ற சித்
தத்தின் விருத்தியைக் கெடுத்ததற்குச் சுத்தியுண்டாக்
கும்பொருட் டவ்விருப்புவெறுப்பை- ராகத்துவேஷப்
பிரகரணமெனவும் அச்சித்தசுத்தியுண்டானவிடத்து-
இதார்த்தத்தைக் காணபதற்கேதுவாகத் தோற்றின கு
றியைத்தெரிவித்தற்பொருட்டதனைச் சாதனசதுஷ்டய
ப்பிரகரணமெனவும் அவையுதித்தவிடத்துப் பாஞ்சபூ
தப்பவுதிகமுதலிய வனைத்துஞ்சடமெனத் தெரிவித்தற்
பொருட்டவற்றைத் தூலப்பிரகரணமெனவும்- அவை
கள் சடமானவிடத் தவைகளை மேற்கிற்றன்றக்கொண்ட
சைப்பிக்குமந்தக்கரணங்களைச்சடமென்றறிந்தவைகளை
நீக்குதற்பொருட்டவற்றைச் சூக்குமப்பிரகரண மென
வும் அவைகளடங்கினவிடத் திவைகட்குக்காரணமான
மாயையவித்தையை யமோயிதமென்றறிந்தகற்றும்பொ
ருட்டவற்றைக் காரணப்பிரகரணமெனவும் - அவைக
ணீங்கினவிடத் தெதிரிட்ட சிவேஸ்வரர்களை மறைத்த
மகத்துவப்புரசிவிதிகளைச்சிற்பிரகாசமாகநீக்குதற்பொ

ருட்டவைகளை மகாகாரணப்பிரகரணமெனவும்-இவைகளனைத்துந் தற்பிரகாசமாக நீங்கிவிடத்தத்தனதுசுயம்பிரகாசமாக விளங்காநின்ற நித்தியானந்தமோமதுஸ்வரூபமெனத் தெரிவிக்கும் பொருட்டதனை நிசானந்தானுபூதிப்பிரகரணமெனவும்பகுத்துக்கூறியவேழுபிரகரணங்களாம் இங்ஙன முறையாகக்கூறத் தொடங்கியவிப்பிரகரணங்களுண் முந்தினபிரகரணத்தில் ராகத்துவேஷாதிகளின் ஸ்வரூபத்தை நிரூபிக்கிறார்.

சுலோகம்,

కామాద్యష్టాదశగుణా హేయోపాదేయతాంగ
తాః। తేషాంస్వరూపంప్రథమంతావత్త్రనిరూప్యతే॥౩

(இதனதுபொருள்.)

காமமுதற்பதினெறு குணங்களில் - ராகமுதற்பதின்மூன்றுந் தள்ளத்தக்கனவும்- இச்சைமுதன் மூன்றுங் கொள்ளத்தக்கனவுமாம் அவைகளின்ஸ்வரூபம்நிரூபம் நிரூபிக்கப்படுகின்றது-ராகத்தினம் சமேகாமமாதலாற் காமாதியெனக்கூறினர் இப்பதின்மூன்றும்ராகத்துவேஷங்களின் பரியாயமெனக்கொள்க,

எந்தராகத்துவேஷங்களினுற் றிரிவித கரணங்களுந் திரிவிதிகன்மங்களைச் செய்கின்றதோவந்தராகத்துவேஷங்களின் குணங்களைநிரூபிக்கிறோம் (அவையாவன)

ராகம்-துவேஷம்-காமம் குரோதம்-லோபம்-மோகம்-ம
தம்-மச்சரம்-ஈரிஷை-அசூயை-டம்பம்-தர்ப்பம்- அகங்
காரம்-எனப்பதின்மூன்றும். இப்பதின்மூன்றுமோட்ச
மடைதற்கு விக்கனமாயிருக்கின்றபடியா னிவற்றைமு
மூட்சுவானவர்கள் காலத்திரயங்களிலும்பரிசயாமற்சர்
வாத்மனைவிட்டுவிட வேண்டியது சித்தம் (இவைகளின்
விபரம்) பரஸ்திரீகமனம் பண்ணவேண்டுமென்றுவிக
ற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு ராகமென்றுபேர்-இ
தைமுமூட்சுவானவர்கள் காலத்திரயத்திலுமில்லாமற்
சர்வாத்மனை விட்டுவிட வேண்டியதுஏன்விட வேண்டிய
தென்றால் பூருவத்திலிராவணன்பரதாரமான சீதைய
ம்மனை யிச்சித்தராகத்தினாலவன் பிராணஹானி பந்து
நாசமிராச்சியஹானி யிகபரங்களி லபகீர்த்தியிவைமு
தலானவநேகவனர்த்தங்கள் அனுபவித்தும்-இன்னஞ்ச
கோதரான சந்தோபசுந்தராளி வருந் திலோத்தமையை
க்கண்டுன்பாரிஎன்பாரியென்றடித்துக்கொண்டிறந்தது
ம்இன்னமநேகம்பேர் இந்தராகத்தினாற் றுக்கமனுபவி
த்ததுஞ் சாத்திரங்களிற கண்டிருக்கிறோமானபடியினா
லும்இப்போதிருக்கிறபேர்களு மிந்தராகத்தினா லநேக
துக்கமனுபவிப்பதை பிரத்தியட்சமாகக் கண்டிருக்கிற
படியினாலும் இனிப்பிறக்கப்போகிற பேர்களிடத்திலு
மிந்தராகமிருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்களென்று
தோற்றுகிறபடியினாலும்- இந்தராகத்தை முமூட்சுவா
னவர்கள் சர்வாத்மனை விட்டுவிடவேண்டியது சித்தம்.

இப்படியே தனக்கொருவனபகாரம் பண்ணினா லவனு
க்குப திலபகாரம் பண்ணவேண்டுமென்று விகற்பித்து
வருகிறசித்தவிருத்திக்குத் துவேஷமென்று பேர் - இ
தைமுமூட்சுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற்
சர்வாத்மனைவிட்டுவிடவேண்டியது ஏன் விட்டுவிடவே
ண்டியதென்றால்பூருவத்தில் இரணியகசிபன்றன்றமை
யனைக்கொன்ற நாராயணனைக்கொல்லவேண்டுமென்று
துவேஷத்தினா லவனுடையபிராணஹானி பந்து நாச
மிராச்சிய ஹானியிகபரங்களி லபகீர்த்திகளிவை முத
லானவநேகவநர்த்தங்களனுபவித்தது மின்னு மநேகம்
பேரிந்தத்துவேஷத்தினால்-துக்கமனுபவித்ததுஞ் சாத்
திரங்களிற்கண்டிருக்கிறோமானபடியினாலும்-இப்போ
திருக்கிறபேர்களு மிந்தத்துவேஷத்தினா லநேகதுக்கம
னுபவிப்பதை பிரத்தியட்சமாகக் கண்டிருக்கிறபடியி
னாலும் இனிப்பிறக்கப்போகிறபேர்களிடத்திலு மிந்
த்துவேஷ மிருந்தாற்றுக்கமேயனுபவிப்பார்களென்று
தோற்றுகிறபடியினாலும் இந்தத்துவேஷ முமூட்சுவா
னவர்கள் - சர்வாத்மனை விட்டுவிடவேண்டியது சித்தம்
இப்படியே புத்திரமித்திர களத்திரகிரகக்கிராமக்ஷேத்
த்திரதனதான்யாதிகண் மேன்மேலுஞ் சம்பாதிக்கவே
ண்டுமென்று விகற்பித்துவருகிறசித்தவிருத்திக்குக் கா

மமென்றுபேர். இதைமுமூட்சுவானவர்கள் காலத்திர
யத்திலுமில்லாமற் சர்வாத்மனாவிட்டுவிட வேண்டியது
ஏன்விட வேண்டிய தென்றால் பூருவத்தில்நரகாசுரன்ல
ட்சம்ஸ்திரிகளைக் கலிபாணஞ்செய்வதற் காசித்துத்தே
வஸ்திரிகள்பதினாயிரம் பேர்களைச் சிறைபிடித்து வந்த
தைக்கேட்ட ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் பிராண ஹா
னிபந்துநாசமிராச்சியஹானி யிகபரங்களிலபகீர்த்தி யி
வைமுதலான துக்கங்களனுபவித்து மின்னுமநேகம்பே
ர்துக்கமனுபவித்ததுஞ்சாத்திரங்களிற்கண்டிருக்கிறோ
மானபடியினாலுமிப்போதிருக்கிற பேர்களுமிந்தக்காம
த்தினாலநேகதுக்க மனுபவிப்பதைப் பிரத்தியட்சமாக
க்கண்டிருக்கிற படியினாலும் இனிபிறக்கப்போகிறபேர்
களிடத்திலுமிந்தக்காமமிருந்தாற் றுக்கமே யனுபவிப்
பார்களென்று தோற்றுகிறபடியினாலும் மிந்தக்காமமு
மூட்சுவானவர்கள்சர்வாத்மனா விட்டுவிட வேண்டியது
சித்தம்இப்படியே தனக்குவேண்டிய காரியங்களிலொ
ருவன் விக்கினம்பண்ணினா லவனிடத்திலாக்கிரகமாக்
விகற்பித்துவருகிறசித்தவிருத்திக்குக் குரோதமென்று
பேர்-இதைமுமூட்சுவானவர்கள் காலத்திரயத்திலுமில்
லாமற் சர்வாத்மனாவிட்டுவிட வேண்டியது ஏன்விட வே
ண்டியதென்றால் பூர்வத்திலபகாசூரன் றனதுபசிப்பிற்
கு விக்கினஞ்செய்தவீமராசன்மேலிற் குரோதம்வைத்
தனா லவன்பிராணஹானி பந்துநாசமிராச்சியஹானியி

காரங்களிலபகீர்த்தி யினைமுதலானவநேகவநர்த்தங்க
ளனுபவித்தது முன்ன மநேகம்பேரிந்தக் குரோதத்தி
னால் துக்கமனுபவித்ததுஞ் சாத்திரங்களிற் கண்டிருக்
கிறோமானபடியினாலும் இப்போதிருக்கிற பேர்களிந்
தக்குரோதத்தினாற் றுச்கமனுபவிக்கிறது பிரத்தியட்ச
மாகக்கண்டிருக்கிறபடியினாலும் இனிப்பிறக்கப் போகிற
பேர்களிடத்திலிந்த குரோதமிருந்தாற் றுக்கமேயனுப
விப்பார்களென்று தோற்றுகிறபடியினாலுமிந்தக்குரோ
சமுமூட்சுவானவர்கள் சர்வாத்மனை விட்டு விடவேண்டி
யதுசித்தம் - இப்படியேதான் சம்பாதித்த பதார்த்தங்க
ளிலொருகுத்தருக் கொருகாசளவு செலவுபண்ண லாகா
தென்று விகற்பித்துவருகிற சித்த விருத்திக்கு லோப
மென்றுபேர் இதைமுமூட்சுவானவர்கள் காலத்திரயத்
திலுமில்லாமற் சர்வாத்மனைவிட்டுவிடவேண்டியதுஏன்
விடவேண்டியதென்றால் பூர்வத்தில்துரியோதனனைவ
ன்சூதாடிக்கெலித்தபாண்டவர்களுடைய ராச்சியத்திலவ
வர்கள்வசிக்கக்கூட விடக்கொடுக்கமாட்டேனென்றலோ
பத்தினாலவன்பிராணஹானியுந்துகாசம்பிராச்சியஹானி
யிகபரங்களிலபகீர்த்தியினைமுதலான வநேகவநர்த்தங்
களனுபவித்தது பின்னுமநேகம்பேர் துக்க மனுபவித்
ததுஞ்சாஸ்திரங்களிற்கண்டிருக்கிறோமானபடியினாலு
ம் இப்போதிருக்கிறபேர்களிந்தலோபத்தினா லநேகது

க்கமனுபவிப்பதும் பிரத்தியட்சமாகக்கண்டிருக்கிறபடி
யினாலும் இனிப்பிரக்கப்போகிறபேர்களிடத்திலுமிந்த
லோபம இருந்தாற்றுக்கமே யனுபவிப்பார்களென்று
தோற்றுகிறபடியினாலும்இச்சலோபம் முமுட்சுவானவ
ர்கள் சர்வாத்மனாவிட்டுவிடவேண்டியதுசித்தம் இப்படி
யேதான்சம்பாதித்த பதார்த்தத்தின்பேரிற்பிரியமோத
ப்பிரமோதமாய் விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு
மோகமென்றுபேர் இந்தமோகமுமுமுட்சுவானவர்கள் கா
லத்திரயத்திலுமில்லாமற் சர்வாத்மனாவிட்டுவிடவேண்
டியது-ஏன்விடவேண்டியதென்றால் பூருவத்தில்தசரத
மகாராசன் தனதுஜேஷ்டபுத்திரனைஸ்ரீராமன்பேரில்
வைத்தமோகத்தினாலவர்மாதுருவாக்கியபரிபாலனநிமி
த்தங்காட்டுக்குப்போனவதனாலிவர்பிராணஹானிபந்து
காசமிராச்சியஹானி யிகபரங்களிலபகீர்த்தி இவைமு
தலானவனேகவனர்த்தங்களனுபவித்துமுன்னுமிந்தமோ
கத்தினாலனேகம்பேர்துக்கமனுபவித்சதுஞ் சாஸ்திரங்க
ளிற்கண்டிருக்கிறோமானபடியினாலும் இபபோதிருக்கி
றபேர்களிந்த மோகத்தினாலனேகந்துக்கங்களனுபவிக்கி
றதுபிரத்தியட்சமாகக்கண்டிருக்கிற படியினாலும் இனி
ப்பிறக்கப்போகிறபேர்களிடத்திலுமிந்தமோகமிருந்தா
ற்றுக்கமேயனுபவிப்பார்களென்றுதோற்றுகிறபடியினா
லுமிந்தமோகமுமுமுட்சுவானவர்கள் சர்வாத்மனாவிட்டுவி

டவேண்டியது சித்தம்-இப்படியேஐஸ்வரியவர்களையுத்
திறற்கெர்வித்து கிருத்தியாகிருத்தியந்தெரியாமல்விக
ற்பித்துவருகிற சித்தவிருத்திக்குமதமென்றுபேர்இந்த
மதமுமூட்கவானவர்கள் காலத்திரயத்திலுமில்லைமற்ச
ர்வாத்மனைவிட்டுவிடவேண்டியதுஎன்விடவேண்டியதெ
ன்றால் பூருவத்தில்கார்த்தவீரியார்ச்சுனனென்பவன் றன்
னிடத்தில்வந்தமகாரிஷியான நாரதனைமதித் துபசாரம்
பண்ணாமற் கெர்வித்திருந்ததைக்கேட்ட பரசுராமனால
வன்பிராணஹானி பந்துநாசமிராச்சியஹானி யிகபரங்
களிலபகீர்த்தியிவைமுதலான வநேகவனர்த்தங்களனுப
வித்தது மின்னுமிந்தமதத்தினாலநேகம்பேர் துக்கமனு
பவித்ததுஞ்சாத்திரங்களிற்கண்டிருக்கிறோமானபடியி
னாலும் இப்போதிருக்கிறபேர்களிந்த மதத்தினாலநேக
துக்கமனுபவிக்கிறதுபிரத்தியட்சமாகக்கண்டிருக்கிறப
டியினாலும் இனிப்பிறக்கப்போகிற பேர்களிடத்திலும்
இந்தமதமிருந்தால் துக்கமே யனுபவிப்பார்க ளென்று
தோற்றுகிறபடியினாலும் இந்தமுமூட்கவானவர்கள் சர்
வாத்மனைவிட்டுவிடவேண்டியதுசித்தம் இப்படியேஒரு
த்தர்சுகமாயிருந்தாலவர்களைப்பார்த்துச்சகிக்காமல்விக
ற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு மச்சரமென்று பேர்-
இந்தமச்சரமுமூட்கவானவர்கள் காலத்திரயத்திலுமில்
லைமற்சர்வாத்மனை விட்டுவிடவேண்டியது என்விடவே
ண்டியதென்றால் பூருவத்தில்சிசுபாலனானவன் தருமரா

ஜன்ராஜசூயயாகத்திலக்கிரதாம்பூலம்வாங்கத்தக்கவரா
ரென்று விசாரித்துஸ்ரீகிருஷ்ணசுவாமிக்குக் கொடுத்த
தைச்சகிக்காமல் மச்சரப்பட்டதினாலவனுடையபிரா
ணஹானி பந்துநாசராச்சியஹானி யிகபரங்களி லப
கீர்த்தியிவைமுதலானவநேகவனர்த்தங்களநுபவித்தது
மின்னுமிந்த மதத்தினாலநேகம்பேர் துக்கமேயனுபவித்
தது சாத்திரங்களிற்கண்டிருக்கிறதானபடியினாலும்
இப்போதிருக்கிறபோகளிந்த மச்சரத்தினாற்றுக்கமேய
னுபவிக்கிறது பிரத்தியட்சமாகக்கண்டிருக்கிறபடியினா
லும் இனிபிறக்கப்போகிறபேர்களிடத்திலுமிந்தமச்சர
மிருந்தாற்றுக்கமேயனுபவிப்பார்களென்று தோற்றுகி
றபடியினாலும் இந்தமச்சரமுமூட்சுவானவர்கள் சர்வா
த்மனாவிட்டுவிடவேண்டியது சித்தம். இப்படியேதனக்
குவந்தத்துக்கம்பிரத்தியாருக்குவரலாகாதாவென்று விக
ற்பித்துவருகிற சித்தவிருத்திக்குஈரிஷை யென்றுபேர்
இந்தஈரிஷைமுமூட்சுவானவர்கள் காலத்திரயத்திலுமி
ல்லாமற்சர்வாத்மனாவிட்டுவிடவேண்டியதுஏன்விடவே
ண்டியதென்றால்பூருவத்தில்அருணாட்சதன்தனக்குவந்
த்துக்கந்தனதிஷ்டனானவாணாசுரனுக்குவரலாகாதாவெ
ன்றெதிர்த்தவீரிஷையினாற் பிராணஹானிபந்துநாசமி
ராச்சியஹானியிகபரங்களிலபகீர்த்தியிவைமுதலானவ
நேகவனர்த்தங்களனுபவித்ததுமின்னுமிந்த வீரிஷையி

னேகம்பேர் துக்கமனுபவித்ததுஞ் சாத்திரங்களிற்
கண்டிருக்கிறோமானபடியினாலும்இப்போதிருக்கிறபே
ர்களிந்தவீரிஷையினாற்றுக்கமேயனுபவிப்பதுபிரத்திய
ட்சமாகக்கண்டிருக்கிறபடியினாலு மினிபிறக்கப்போகி
றபேர்களிடத்திலு மிந்தவீரிஷையிருந்தாற் றுக்கமேய
னுபவிப்பார்களென்றுதோற்றுகிறபடியினாலும்இந்தவீ
ரிஷைமுமூட்சுவானவர்கள்சர்வாத்மனாவிட்டுவிடவேண்
டியதுசித்தம் இப்படியோதனக்குவந்தசுகம்பராளுக்குவ
ரலாமாவென்றுவிகற்பித்து வருகிறசித்தவிருத்திக்கு அ
சூயையென்றுபேர் இந்தமுமூட்சுவானவர்கள் காலத்தி
ரயத்திலுமில்லாமற்சர்வாத்மனாவிட்டுவிடவேண்டியது
ஏன்விடவேண்டியதென்றால் பூருவத்தில் பவுண்டரீக
வாசுதேவனானவன் தனக்கும் வாசுதேவன் கிருஷ்ணனு
க்கும்வாசுதேவனென்று பேராவென்கிற வசூயையினா
லவரிடத்தெதிர்த்துப்பிராணஹானி பந்துநாசமிராச்சி
யஹானியிகபரங்களி லபகீர்த்தியிவைமுதலான வநேக
வனர்த்தங்களனுபவித்தது மின்னுமநேகம்பேரிந்தவசூ
யையினாற்றுக்கமே யனுபவித்ததுஞ் சாத்திரங்களிற்க
ண்டிருக்கிறோமானபடியினாலும் இப்போதிருக்கிறபே
ர்களுமிந்தவசூயையினாற் றுக்கமேயனுபவிப்பது பிரத்
தியட்சமாகக் கண்டிருக்கிறபடியினாலுமினிப்பிறக்கப்
போகிறபேர்களிடத்திலிந்தவசூயையிருந்தாற்றுக்கமே

யனுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினாலு மிந்த
வருஷ முமுட்சுவானவர்கள் சர்வாத்மனாவிட்டுவிடவே
ண்டியது சித்தம் இப்படியே தான்பண்ணின தரும்தி
ஷ்டைகளும் பேரும்பார்த்து பலாநன்றா யிருக்கின்றதென்
று சொல்லவேண்டுமென்று விகற்பித்துவருகிற சித்தவி
ருத்திக்கு டம்பமென்றுபேர் இந்த முமுட்சுவானவர்க
ள் காலத்திரயத்திலுமில்லாமற் சர்வாத்மனாவிட்டுவிட
வேண்டியது ஏனவிடவேண்டியதென்றால் பூருவத்தில்
ஒருமகாராசனானவன் தூருவாச ரிஷியைப்பார்த்து
நான்செய்தயாகங்களைப்போல யார்செய்யப்போகிறார்க
ளிது நன்றாயிருக்கிறதே யென்றுகேட்க யானைத்துதிக்
கைபோல ஆயிரம்வருஷம் நெய்சொரிந்து யாகஞ்செய்
தவனுமிப்படி கேட்கவில்லையே யென்ன டம்பயாகமென்
று சொன்னவனைக்கோபித்து அவனதுயாகத்தோடு மவ
ன்பிராணஹானிபந்து நாசமிராச்சியஹானி யிகபரங்க
ளிலபகீர்த்தி இவைமுதலானவநேகவனர்த்தங்களனுபவி
ப்பது மின்னுமிந்தடம்பத்தினாலநேகம்பேர் துக்கமனு
பவித்ததுஞ்சாத்திரங்களிற்கண்டிருக்கிறோமானபடியி
னாலும் இப்போதிருக்கிறபேர்களிந்தடம்பத்தினால் துக்
கமேயனுபவிப்பது பிரத்தியட்சமாகக் கண்டிருக்கிறப
டியினாலும் இனிப்பிறக்கப்போகிறபேர்க ளிடத்திலுமி
ந்த டம்பமிருந்தாற்றுக்கமே யனுபவிப்பார்க ளென்று

தோற்றுகிறபடியினாலு மிந்தடம்பமுமூட்சுகளானவர்கள் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியதுசித்தம் இப்படியே புத்திரமித்திரகளத்திர தனதானியாதிசம்பத்துத்தனக்கேயுண்டு தனக்கொருத்தருஞ் சமானமில்லையென்று விகற்பித்துவருகிறசித்தவிருத்திக்குத் தர்ப்பமென்றுபேர் இதைமுமூட்சுவானவர்கள்காலத்திரயத்திலு மில்லாமற்சர்வாத்மனாவிட்டுவிடவேண்டியதுஏன்விடவேண்டியதென்றால் பூருவத்திற்சதகந்தரனானவன் ஐஸ்வரியத்திற்றனக்கொருத்தருஞ்சமானமில்லையென்று அமரர்களுக்கு உபத்திரவஞ்செய்ததை நாரதரிராமருக்கறிவிக்கவவர்பாரியான சீதையம்மனாலவன்பிராணஹானி பந்துநாசமிராச்சியஹானிஇகபரங்களிலபகீர்த்தியிவை முதலான வனேகவனர்த்தங்களனுபவித்தது மின்னுமிந்தத்தர்ப்பத்தினாலனேகம்பேர் துக்கமேயனுபவித்ததுஞ் சாத்திரங்களிற்கண்டிருக்கிறோமானபடியினாலும் இபபோதிருக்கிறபேர்களிந்தத்தர்ப்பத்தினாற்றுக்கமேயனுபவிப்பது பிரத்தியட்சமாகக்கண்டிருக்கிறபடியினாலும் இனிப்பிறக்கப்போகிறபேர்களிடத்திலுமிந்தத்தர்ப்பமிருந்தாற்றுக்கமேயனுபவிப்பார்களென்றுதோற்றுகிறபடியினாலுமிந்தத்தர்ப்பமுமூட்சுவானவர்கள்சர்வாத்மனா விட்டுவிடவேண்டியதுசித்தமிப்படியேயடாஎன்னையறியாயாநான்பிடித்தகாரியம்விடுவேனோநீயாவெனக்குப்புத்

இசொல்கிறவமென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக் ககங்காரமென்றுபேர்-இதை முமூட்சுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமல் சர்வாத்மனை விட்டுவிட வேண்டியது-ஏன்விடவேண்டியதென்றால் பூருவத்தில மதுகைடவரென்பவர்கள் மகாவிஷ்ணுவோடு பதினாயிரம்வருஷம் யுத்தஞ்செய்திளையாமலவர்வரங்களுக் காசியரமுறலுங்களந்த விஷ்ணுவுக்குவரங்கொடுத்த வகங்காரத்தினாற் பிராணஹானிபந்து நாசமிராச்சியஹானி இகபரங்களி லபகீர்த்தியிவைமுதலான வநேகவநர்த்தங்கலனுபவித்தது மின்னுமிந்த வஹங்காரத்தினலநேகம்பேர் துக்கமனுபவித்ததுஞ் சாத்திரங்களிற் கண்டிருக்கிறோ மானபடியினாலும்-இப்போதிருக்கிற பேர்களிந்தவகங்காரத்தினாற் றுக்கமேயனுபவிப்பதுபிரத்தியட்சமாகக் கண்டிருக்கிறபடியினாலும்-இனிப்பிறக்கப்போகிறபேர்களிடத்தி லிந்தவகங்காரமிருந்தாற் றுக்கமேயனுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினாலுமிந்தவகங்கார முமூட்சுவானவர்கள் சர்வாத்மனைவிட்டுவிடவேண்டியது சித்தம்-இதராகமுதலகங்காரமீறான பதின்மூன்று குணங்களினா லிராவணன்முதல் மதுகைடவாதீறானபேர்கள் மஹாசமர்த்தராயிருந்து மவர்கள் பிராணஹானிமுதலான வநேகவநர்த்தங்கண் முன்னனுபவித்தது சாத்திரங்களிற்கண்டிருக்கிறோ மானபடியினாலு மிப்படியே சத்தியவர்த்தமானகாலத்தில் மிந்தராகாதிகுணங்களா லநேகஜனங்கள் பிராணஹானிகளும்

அநேகரோகங்களும்-அநேகதிரவியநாசங்களும்- பந்துக்கள்விரோதங்களும் அபகீர்த்திகளும்இவைமுதலானவநேகவனர்த்தங்களனுபவிக்கிறது பிரத்தியட்சமாகக்கண்டிருக்கிறோமானபடியினாலும்-இனிப்பிறக்கப்போகிறபேர்களு மிந்த ராகாதிகுணங்களினின்று விடுபடாமற்போனார்களாகி லிப்படியேயநேகவனர்த்தங்க ளனுபவிப்பார்களென்று தோற்றப்படுகிறபடியினாலும்-இந்தராகாதி பதின்மூன்றுகுணங்களு மோக்ஷமார்க்கத்துக்குச்சத்துருவாயிருக்கிறபடியினாலும் ஜநநமரணப்பிரவாகரூபமான நரகத்துக் கேதுவா யிருக்கிறபடியினாலும்-இப்பதின்மூன்று குணங்களையு முமூட்சுவானவர்களசர்வாத்மனா விட்டுவிடவேண்டியது சித்தம்-இவைகளாலுண்டான ஜநநமரணமே நரகமென்பதா மிதற்குச் சமுசயமில்லை-ஜநநமரணரூபமான தேகமே நரகமென்பதற்குப்பிரமாணம்-எங்கே சரீரமுண்டோ வங்கேயெல்லாந்துக்கமுண்டு எங்கே சரீரமில்லையோ வங்கேயெல்லாந்துக்கமில்லையென்று வேதத்திற் சொல்லியிருக்கிறபடியினா லிந்தச்சரீரமே சகலதுக்கங்களுக்குஞ் சகலவனர்த்தங்களுக்கு மேதுவாகவிருப்பதினா லிந்தச்சரீரமே நரகமென்றுசொன்னது சித்தம்-ஆகலா லிந்தச் சரீரத்துக்கேதுவான விப்பதின்மூன்றுகுணங்களையு முமூட்

சுவாயிருக்கப்பட்டபேர்களவசியம்விட்டுவிடவேண்டிய
துசித்ரம்-இனிக்கொள்ளத்தக்கதுகளான விச்சை முத
ல்மூன்றுகுணங்களையு நிரூபிக்கிறோம்- அவையாவன
பசிதாகநிமித்த மன்னபானதிகிராகியமுமலமூத்திரவி
சர்ச்சனமும் பண்ணவேண்டுமென்று வருகிறசித்தவி
ருத்திக்கிச்சையென்றுபேர்-இவைபண்ணுமற்போனாற்
றுக்கமும் பண்ணினாற் சுகமுமாயிருக்குமிதனாற் பந்த
மோக்ஷனு சுவர்க்கநரகமில்லையாதலாற் கொள்ளத்தக்க
தாம்-இப்படியே மகாதேவரீரிடத்திற் பிரியம்வருகிறசி
த்தவிருத்திக்குப் பத்தியென்றுபேர்குருவேதாந்தசாத்
திரங்களின் மிகவும்விசுவாசம்வைத்தசித்தவிருத்திக்கு
ச்சிரத்தையென்றுபேர்-இந்தப்பத்தி சிரத்தை முத்தி
யையடைவிப்பதற் கேதுவாதலினாலும் பூருவத்திற்கட்
டுவாங்கதனென்கிற மகாராசன் இந்தச்சிரத்தாபத்தினா
லிரண்டுநாழிகையின்முத்தியை யடைந்தானென்று சா
த்திரங்களிற் கண்டிருக்கிறோ மானபடியினாலு முமூட்
சுவானவர்களிந்தச் சிரத்தாபத்தியவசிம் பண்ணவேண்
டியதுசித்தம் இராசாதிபதினாறுகுணங்களு நிரூபிக்கப்
பட்டது.

ராகத்துவேஷப்பிரகரணஞ் சம்பூரணம்,

திருச்சிற்றம்பலம்.

இரண்டாவது

சாதனசதுஷ்டயப்பிரகரணம்.

முற்பிரகரணத்திற் கற்பனாரூபமான விஷயசுகங்களைப் பிரியமாக விசுவசித்ததிற் சுழலாநின்ற மனோவிருத்திக்கவைதுன்பமெனத் தெரிவித்தவ் விருத்தியை விஷயசுகங்களினின்று நீக்கி மேல்யதார்த்தசுகத்திற் பிரியம்வைக்கும்படி செய்ததனாலுண்டான சிரத்தாபத்தியினாற் சுத்தசுத்தியுண்டாக்கிப் பின்பவ்யதார்த்தம் வெளிப்படுதற்கேதுவான சாதனசதுஷ்டயப்பிரகரணம் நிரூபிக்கிறார்.

சுலோகம்,

(இதனதுபொருள்,)

வேதாந்தத்தினான்கு சாதனங்க ளதிகாரிகளுக்காகச்சொல்லியிருக்கின்றது-அவைகளின் ஸ்வரூபங்கிரமத் நிரூபிக்கப்படுகின்றது,

எந்தச்சாதனசதுஷ்டயசம்பத்தியினான்யாவரும்மோக்ஷமடைவார்களோ வந்தச்சாதன சதுஷ்டய சம்பத்தி

யைநிரூபிக்கிறோம்-அவையாவன-நித்தியா நித்தியவஸ்துவிவேகம் இகாமுத்திரார்த்த பலபோகவிராகம்சமாதிசட்கசம்பத்தி முமூட்சுத்துவமென நான்குவிதமாம் இவற்றில்-நித்தியாநித்திய வஸ்துவிவேகமென்பது-பிரமமேநித்தியவஸ்து- சகத்தநித்தியவஸ்துவெனப்பகுத்தறிவதாம்.

இச்சக மநித்திய மென்பதெப்படியென்றால்- இவை பூதபவுதிகாத்மகமானபடியினாலனித்தியமேயாம்- இவ்வனம்பூதபவுதிகாத்மகமாகத்தோற்றப்படுகிறசகத்தின் முன்னே பவுதிகங்களுக்கநித்தியத்துவநிரூபிக்கிறோம்,

அப்பவுதிகமாவதியாதெனில்-நால்வகையோனிஏழுவகைத்தோற்றம்-எண்பத்து நான்குலக்ஷம்பேதங்களாயுள்ள சரீரங்களாம்,

அவற்றினால்வகையோனியென்பது-சராயுசமண்டசஞ்சுவேதசமுற்பிச மென்பனவாம் இவற்றிற்பையிற்கட்டுப்பட்டுப்பிறப்பது சராயுசமும் முட்டையிற்கட்டுப்பட்டுப்பிறப்பது அண்டசமும் வியர்வையிடமாகப்பிறப்பது சுவேதசமும்- பூமியிடமாகப்பிறப்பது உற்பிசமுமாம்

ஏழுவகைத்தோற்றமென்பது-தேவரும்மானிடரும் மிருகமும்பட்சிகளும் ஊர்வனவும் நீர்வாழ்வனவுந்தாபரங்களுமாம்.

எண்பத்துநான்குலக்ஷம் பேதமென்பது தேவபேதம்பதினாலுலக்ஷமும்-மானிடபேதமென்பது லக்ஷமும்

மிருகபேதம்-பத்துலட்சமும்-பட்சிபேதம் பத்துலட்சமும்-ஊர்வனபேதம் பதினொருலட்சமும்- நீர்வாழ்வனபேதம்பத்துலட்சமும்-தாபரபேதம் பதினெட்டு லட்சமுமாம்.

இவற்றில்-தேவகந்தருவசித்தசாத்திய கின்னரகிம்புருடகுய்யகவித்தியாதர யட்சராட்சத பூதப்பிரேதபிசாசுசாகினிடாகினிவேதாளரியான தேவசரீரங்களும்-மாந்தாதிசக்கிரவர்த்தி பிரமக்ஷத்திரிய வைசியசூத்திரர்முதலான நரசரீரங்களும்-காமதேனுசிம்மமுதலான மிருகசரீரங்களும் அன்னங்கருடன்-முதலான பட்சிசரீரங்களும்-சேடனெறும்புமுதலியவூர்வனசரீரங்களும்-மகரமச்சங்கூர்மமுதலியநீர்வாழ்வனசரீரங்களும்-கற்பகவிருட்சம் பாரிசாதமுதலியதாபரசரீரங்களுமாம்,

பூர்வத்திலித்தேவர்முதலிய வெண்பத்துநான்குலட்சம்பேதமாயுள்ளசரீரங்களும் நசித்துப்போனது சாத்திரங்களிற்கண்டிருக்கிறோமானபடியினாலும்-இப்படியேசத்தியவர்த்தமான காலத்திலுமிருக்கின்ற மாதாபிதாமுதலான சகல சரீரங்களும்-நசிப்பது பிரத்தியட்சமாகக் கண்டிருக்கிறபடியினாலும்-இனிப்பிறக்கப்போகிறசகலசரீரங்களுமிப்படியேநசிக்குமென்று தோற்றப்படுகிறபடியினாலுமிந்தப்பவுதிகமான சகலசரீரங்களுமநித்தியமென்பதுசித்தம்.

இப்படியே-பிருதிவியாதிப்பஞ்ச பூதங்களுமநித்தியத்துவம் நிரூபிக்கிறோம்.

அஃதெப்படியென்றால்-இப்பூதங்கள் பிறந்திருக்கிறபடியினாலும்-அவயவிகளாயிருக்கிறபடியினாலும் பிரளயகாலத்தி னசித்துப்போகிறபடியினாலும் அநித்தியமேயாம,

அவைகளெப்படி நசிக்கிறதென்றால்- பிரமப்பிரளயம்வருகிறகாலத்திற் பனிரெண்டுசூரியர்களு முதயமாய் நூறுவருஷ மழையில்லாம லெரித்துச் சகத்தெல்லாம பஸ்பம்பண்ணிப் பூமியைத் தாங்கிக்கொண்டிருந்தவாதிசேடனுடைய மகுடங்களை பஸ்பம்பண்ணுகிறபோது அந்தவாதிசேடனுடைய முகங்களிலிருந்து காளகூட விஷாக்கினிபிறந்தந்த விஷாக்கினியுஞ் சூரியாக்கினியுங் கூடியந்த வாதிசேடன்முதற் றுவாதசாதித்தாளையும்பஸ்பம்பண்ணி யப்படிப்பஸ்பம்பண்ணின வக்கினியினின்றுஞ் சத்தமகாமேகங்கள்பிறந்து நூறுவருஷமுயானைத்துதிக்கைபோல வருஷதாரைகள் வருஷிக்கும அந்த வருஷசலமே காரணமாநிற்கும்-அந்தசலத்தில் அப்பூமிபஸ்பம்விநயமாகும்-அப்போதந்தசலம் வாயுஸ்தம்பமாநிற்கும்-அப்படிநிற்கின்ற சலத்தில் வடவாமுகம்பிறந்தந்தயேகாரணவமான சலமெல்லாங் கிரகிக்கும்-அவ்வடவாக்கினியும் பிரசண்டவாயுவிலீநமாகும்- அந்த வாயுவுமாசத்திலீநமாகும்-அவ்வாகசமும் மஞ்ஞானத்துதிலீநமாக-அவ்வஞ்ஞானமும்பிரமத்திலீநமாகும்அ,

ப்பிரமமொன்றுமேசேஷித்துநிற்கும் ஆனபடியினாற்ப
ஞ்சபூத பவுதிகாத்மகமானசகத் தநித்தியமென்று சொ
ன்னது -இப்படி விசேஷித்துநின்றபிரமத்துக்குவேறே
காரணமில்லாதபடியாற் பிரமமே நித்தியமென்றுசொ
ன்னதுசித்தம்,

இங்ஙன நித்தியாநித்திய வஸ்துக்களி னிச்சயந்தெரி
தலாகியமுதற் சாதனங்கை வந்தாற் போதாதோ வென்
றாற்போதாது-ஏன்போதாதென்றால் சில வித்துவான்க
ள்சாத்திரபாண்டித்தியத்தினா லாத்மாவொன்றுமேநித்
தியமென்றுஞ் சகத்தநித்தியமென்றுஞ் சொல்லிக்கொ
ண்டுஸ்திரீ புத்திரதனதானியாதி போகங்களி லிச்ச
ணை வைத்துக்கொண்டிருக்கிறதினு லநித்தியமானது நித்தி
யமென்றவருமாதலா லிரண்டாஞ்சாதனமானவிகாமு
த்திரார்த்தபலபோகவிராகமுஞ்சம்பாதிக்கவேண்டும்.

இவ்விகாமுத்திரார்த்தபலபோகவிராகமாவதியாதெ
ன்று லதையுநிரூபிக்கிறோம்,

இஃதாவது-இகலோகவைராக்கியமென்றும் பரலோ
கவைராக்கியமென்று மிரண்டுவிதமாம்.

இவற்றி லிகலோக வைராக்கியமாவது ஸ்ரக்சந்
தன வநிதாதி விஷயங்களில் வாந்தாசன மூத்திரபுரீ
ஷங்களி லெப்படி யிச்சைவாராதோ வப்படியிச்சைவா
ராமற் போகிறது - இவ்விதவைராக்கிய

மில்லாவிட்டா லிகத்திற்றான் சம்பாதிக்க வேண்டுமெ
ன்கிற புத்திர மித்திர களத்திர பசுபிரத்திய பலபந்து
கிரகக்கிரமக்ஷேத்திர தனதானியாதி கண்முதலியவற்
றைச் சம்பாதிக்க வேண்டு மென்றான் மிகவும்பிரயாச
சாத்தியமா யிருக்கிறபடியினாலும் பிரயாசப்பட்டெத்த
னம் பண்ணினாலப்படி யெத்தனம்பண்ணின பதார்த்த
ங்களிற்சிறிது கூடிவருகிறதுஞ்சிறிது கூடிவராமலும்
போகிறபடியினாலும் அப்படிக் கூடிவராத பதார்த்தத்
தைத்தொட்டு வெகுதுககு பரம்பரைகள் வருகிறபடியி
னாலும் அந்ததுக்கத்தோடு கூடிக்கொண் டிருக்கிறவே
ளையிற பெரியோர்களா யிருக்கப்பட்ட போகளவர் தே
தாகிலுஞ் சற்காரம்பண்ணவேண்டுமென்று கேட்டது
ண்டானாலவர்கள்பேரில் யுத்தாயுத்தங்கள்தெரியாமற்க
டினமாயிருக்கப்பட்ட சொல்லினாற்றிரஸ்காரம்பண்ணு
கிறான் அவர்களையப்படிசொல்கின்றபோது வீட்டிற்று
யார்முதலானபேர் பிரியவசனஞ்சொல்லிப் பெரியவர்க
ளையப்படிசொல்லலாமாவென்று சொன்னதே யுண்டா
னாலவர்கள்பேரி லாக்கிரகமாக விழுந்து யுத்தாயுத்தமி
ல்லாத கடினமானசொல்லினா னிராகரிக்கிறானைபடியி
னாலும அப்படிநிராகரித்ததனா லநேகவனர்த்தங்களும்
அநேகதோஷங்களும் வருகிறபடியினாலும் அப்பாவத்
தினானரகங்களில் விழுகிறானைபடியினாலும் இப்படி

யசாத்தியமான பதார்த்தங்களினு லித்தனை யநர்த்தங்களபிறக்கச்சே சாத்தியமானபதார்த்தங்களினு லனர்த்தங்கள்வருகிறதுக்குச் சொல்லவேண்டுமா-

அதுதெப்படியென்ருல் சாத்தியமான வொருபெண்சாதியைத்தொட்டு சாரபயங்களுந்தாயார் தகப்பனுர்விரோதங்களும் அண்ணன்தம்பிவிரோதங்களும் அன்றித் தான்செய்ய வேணுடுமென்கிறநல்லகாரியங்களும் விரோதமாய்த் தன்னை யெண்ணுமல் னடக்கிறபடியினுலுந் துக்கமேதோற்றுகிறது இப்படியே சாத்தியமாயிருக்கப்பட்ட தனத்தைக்குறித்துத் தாயாதிகள்பயமும் ராசசோரர்க்கினிபயமும் இவைமுதலான மகாபயதுக்கங்களுக் கேதுவாயிருக்கிறபடியினுலும் இபபடியேசாத்தியமான புத்திரனைத் தொட்டுச் சொன்னபேசசுக்கேளாமற் றிரிகிறுனென்றும் புத்திசாலியாகாமற் போனுனென்றுஞ் சாரசோரனைத்திரிகிறுனென்றும் இவைமுதலான வநேகதுக்கங்கள்வருகிறபடியினுலும் இப்படியேசாத்தியமாயிருக்கப்பட்ட விப்பதார்த்தங்களினுற் றுககமேதோற்றுகிற தானபடியினுலுமிச்ச விகலோகவைராக்கியமும் அவசியஞ் சம்பாதிக்க வேண்டியது சித்தம்.

பரலோகவைராக்கியமானதேதென்ருல்சுவர்க்கலோகமுதற்சத்தியலோக வரைக்குமுள்ள சகலலோகபோக

க்கும் வந்தாசனமூத்திர புரீஷங்களிலெப்படியிச்சை யில்லையோவப்படியிச்சையற்றுப்போகிறதாம்.

இப்பரவைராக்கியம்பண்ணுமற்போனாற் ரேஷமென்னவென்றாலிகத்திநகுஷமகாராசன்தேவேந்திர போகத்தின்பேரிலிச்சைப்பட்டுச் சோடசமகாதானங்களுமசுவமேதயாகங்களுஞ் செய்துசுவர்க்கத்துக்குப்போய்த்தேவேந்திரப்பட்டமுங் கட்டிக்கொண் டிந்திராணியோடு போகிக்கவேண்டுமென்கிற வதிகப்பரபரப்பினாற் பல்லக்கெடுக்கிறசத்தரிஷி கலத்தியரிஷியை யவமானம்பண்ணினபடியினா லவர்சபிக்க வச்சாபத்தினா லவ்விந்திராணிபோகமுதலான சகலபோகங்களும் வியர்த்தமாய்த் தான்பண்ணின யெக்கியதானபலன்களும் வியர்த்தமாய்மலைப்பாம்பாய்ப்பூமியில் விழுந்துபோன படியினாலும் இன்னுமநேகபேர்சுவர்க்காதிபோகங்கள்வேண்டுமென்கிற வாசையினாலநேகயெக்கியங்களு மநேகதருமங்களுஞ் செய்தவைகள் வியர்த்தமாயநேகதுக்கங்க ளனுபவிக்கிறார்களானபடியினாலு மச்சுவர்க்கலோகமுதற் சத்தியலோகபரியந்தமுள்ள லோகங்களிருக்கிற பிரமாதிசகலதேவதைகளுஞ் சகலரிஷிகளுமொருத்தருக் கொருத்தரன்னியோன்னிய சாபத்தினாலுமொருத்தர் பெண்சாதியையொருத்தரபகரிக்கிறபடியினாலுமிராட்சதாளிராச்சியங்கட்டிக்கொண்டுபோவார்களென்கிறபயத்தினா

லுமொருத்தனைஸ்வரியத்தை யொருத்தர் அபகரிக்கிற
படியினாலு மிப்படியேவைகுண்டத்திலுங் கைலாசத்தி
லுமிருக்கிறபேர்கள் கூடவன்னியோன்னிய சாபங்களி
னாற்றுக்கரூபமா யிருக்கிறபடியினாலு மவ்விடமடைத
ற்கு மிகவும்பிரயாசசாத்தியமா யிருக்கிறபடியினாலும
வசியமாய்ப் பரவைராக்கியம் பண்ணவேண்டியது சி
த்தம்,

இப்படியிகபரவைராக்கியங்களாற் சகலபோகங்களை
யுஞ் சுகதுக்ககன்மங்களையும்விட்டு நிராசையாயிருக்கி
றவிரண்டாஞ்சாதனங் கைவர்தாற்போதாதோ வென்
னிற்பேதாதது ஏன்போதாதென்றால் சிலபாஷண்டர்க
ள்காஷாயந்தரித்துச் சந்நியாசியென்று பேரிட்டுக்கொ
ண்டு சம்சாரத்தையு மோட்சப்பிரதானமான கன்மங்க
ளையும்விட்டுத் தன்சரீரசவுக்கியம்பண்ணும் பொருட்டு
க்குட்சிவாதைதீரச் சிலவித்தைகளைகற்றுக்கொண்டுதா
ன்பெரியவனென்கிற பேரினாலெனக்குச்சமானமாரென்
றகங்கரித்துஞ் சபித்துந்திட்டியு மிதனால் வெகுதுக்கம
டைந்தவனாகமுன்னுள்ளவில்லறமும் பின்னுள்ள துற
வறமு மின்றி யுபயப்பிரஷடத்துவம் வருகிற படியினா
ன்மூன்றாஞ்சாதனமான சமாதிசட்க சம்பத்தியுஞ் சம்
பாதிக்கவேண்டும்.

சமாதிசட்கசம்பத்தியாவ தியாதென்னிலதைய நிரூ
பிக்கிறோம்,

அவைபாவனசமம்-தமம்-உபரதி-திதீட்சை-சமாதானம்-சிரத்தை-யெனவாறுவிதமாம்.

இவற்றிற்சமமாவது மநோநிக்கிரகம் அஃதாவது மனதைச்சலியாமல்க்கட்டி யடக்குவதாம்,

இந்தமநோநிக்கிரகஞ் செய்யாமற்போனாற்பூருவத்திலபிமானித்திருந்த பதார்த்தங்களைச்சித்து மனவைகளைவாசனையாகினைத்துக்கொண்டே யிருக்குமதனாற்றுக்கமே யுண்டாயிருக்கிறபடியினாலும் சத்தியவர்த்தமான காலத்திற்றான்சம்பாதித்தபதார்த்தங்களின் மிகுந்த மோகமாயவைகளை நினைத்துக்கொண்டேயிருக்குமப்போதப் பதார்த்தங்களுக்குச்சற்று விக்கினம்வந்த துண்டானாலதனால்மிகவுந் துக்கமேதோற்றுகிறபடியினாலும்இனிவரப்போகிற பதார்த்தங்களைவாசனையா னினைத்துக்கொண்டேயிருக்கும் அவைவராமற்போனாற்றுக்கமேவிளைகிறபடியினாலுமிகதுக்கங்கண்மனதிலடைந்திருக்கச்சே பெரியோர்கள் வசனங்கள் பிடிபடாதபடியினாலு மிக்க மநோக்கிரகமவசியம்பண்ணவேண்டியதுசித்தம்.

தமமாவது-பாகியேந்திரிய நிக்கிரகம் அஃதாவது-சுரோத்திராதி ஞானேந்திரிய பஞ்சகமும் வாக்காதி கன்மேந்திரியபஞ்சகமும் இவ்விந்திரயங்களைச்செயம்பண்ணாமற்போனா லிப்பாகியேந்திரியம் விஷயங்களிற்போய்விழும் அப்படியேபோய்விழுந்ததேயுண்டானால்தன் மனதைத்தான்ஹானிவரும் அஃதெப்படியென்றால்சத்

தியவிஷயத்தினான் மானுக்கெப்படி ஹானிவந்ததோ பரிசவிஷயத்தினால் யானைக்கெப்படி ஹானிவந்ததோ ரூபவிஷயத்தினால் விட்டிற்பூச்சிக்கெப்படி ஹானிவந்ததோ ரசவிஷயத்தினால் மீனுக்கெப்படி ஹானிவந்ததோ கந்தவிஷயத்தினால் வண்டுக்கெப்படி ஹானிவந்ததோ- இப்படியே இந்தபாகியேந்திரியங்கள்விஷயங்களிற் சென்றால் முகத்தான்ஹானிவருமானபடியினாலிப்பாகியேந்திரியங்கள் விஷயங்களிற்போய்விழாமலவசிய நிக்கிரகஞ்செய்யவேண்டியதுசித்தம்.

உபரதியாவது ஈஷணாத்திரயத்தியாக பூருவகமான சர்வகர்மசந்நியாசமாம்,

அக்கன்மமாவது பாவகன்மமெனவும் புண்ணியகன்மமெனவுமிரண்டாம் இவற்றிற்பாவகன்மத்தினால்நரகப்பிராப்தியுந்திரியக்காதிசரீரமும் வருகிறபடியினாலிந்தப்பாவகன்மமவசியஞ் சர்வாத்மனா விட்டுவிட வேண்டியதுசித்தம்.

இப்படியேபுண்ணியகன்மங் காமியார்த்தமாகச்செய்வானேயாகிற் சுவர்க்கலோகப் பிராப்தியும் தேவத்துவதும் மேற்கீழ்ப்போகிறதும வருகிறதும் ஹானிவிருத்திகளும் லாபாலாபங்களுஞ் ஜநநமரணங்களும் வருகிறபடியினாலிந்தக் காமியார்த்தமான புண்ணியகன்மங்களையுஞ் சர்வாத்மனாவிட்டு விடவேண்டியது சித்தம்,

இப்புண்ணியகன்மம் பகவத்பிரீதியாகப் பண்ணினு னிட்காமமாம்.

இந்நிட்காம புண்ணியத்துவாரா சித்தசுத்திவரும்-இச்சித்தசுத்தித்துவாரா சற்குருலாபங்கிடைக்கும்-இச்சற்குருலாபத்துவாரா சிரவணமுண்டாம் இச்சிரவணத்துவாரா மனனமுண்டாம் இம்மனனத்துவாரா - நிதித்தியாசமுண்டாம் இந்நிதித்தியாசத்துவாரா-ச[illegible]திஞானமுண்டாம் இந்தஞானத்துவாரா மோட்சமடைவார்களாதலாற் புண்ணியகன்மங்களை நிட்காமமாயவசியஞ் செய்யவேண்டியதுசித்தம்.

ஈஷணாத்திரத்தியாகமாவது தனத்தினிடத்தும்-புத்திரனிடத்துந்தாரத்தினிடத்து மிருக்கின்றவிச்சையை நீக்குதலாம்.

இவ்விதமானவிபரதியை யவசியம்பண்ண வேண்டியதுசித்தம்.

திதிட்சையாவது சுகதுக்கங்கள் வரிற்பொறுத்திருத்தலாம் அகுதாவது தான்சம்பாதித்திருக்கிற புத்ரமித்ரகளத்ராதியான சகலபதார்த்தங்களும் செவ்விதாயிருந்தாற்சுகம் அப்பதார்த்தங்களுக்கோர்விக்கினம் வந்தாற்றுக்கம் இச்சுகதுக்கங்கள் லாபாலாபங்கள் மானாவமானங்கள் ஜெயாபஜெயங்கள் தன்னையொருவர்வாதிக்கிற்றான் தண்டிப்பதற்கதிகாரமிருந்தும் பொறுத்தலிவை முதலானவைகளிற் சகித்திருப்பதாம்.

இத்திதீட்சைபண்ணுமற்போனல் இத்தொந்தங்களி லகப்பட்ட-அநேகவர்த்தங்களு மநேகபாபங்களு மநேக சாஞ்சல்யங்களுந் தேகசோஷணைகளும் பெரியோர்கள் சஹவாசத்துக்கு விக்கினங்களுமவாகள் சொல்லும்வச னங்கள் மனதிற்றறியாமல் போகிறது மிவைமுதலான தோஷங்கள் அநேகமிருக்கிறபடியினலிப்பொறுமை ரூபமாயிருக்கப்பட்ட திதீட்சையவசியம்பண்ணவேண் டியதுசித்தம்,

சமாதானமாவது சடேந்திரியங்களையுஞ்சிரவணத்தி னிருத்தல் அதுதாவது பெரியோர்களிடத்திற்சேர்ந்து சிரவணம்பண்ணுகிறகாலத்தின் மனதுமிந்திரியங்களு மவாசனைவசத்திற் செல்லாமற்றிரும்பிச் சிரவணத்தின் பேரிலேசாக்கிரமாகநிறுத்தலாம்இதைபண்ணமற்போ னற் பெரியோர்கள்வசனிக்கும்வசனங்கள் மனதிற்பிடி படாமல் விஷயங்களிற் சென்றுகொண் டிருக்கும் அத னற்பெரியோர்கள் சொன்னதிற்பயனில்லாமற்றுனினை த்திருக்கிறகாரியமுமாகாமல்உபயப்பிரசடத்துவம் வரு மதனலநேகதுக்கப் பிராப்திகளுண்டாமதனல் மோட் சத்துக்குவிக்கினங்கள்வருகிறபடியின னிச்சமாதானம் அவசியம்பண்ணவேண்டியதுசித்தம்.

சிரத்தையாவது-பத்திவிசுவாசமெனவிரண்டாம்.

அவையாவன தாய்தந்தை முதலானவைகளை விட்டி லிருக்கிற பிரியங்களெல்லாஞ் சற்குருவேதாந்த வாக்

இயங்களிடத்தி லேகாக்கிரமாக வைப்பதுவிசுவாசமும் ஈஸ்வரனிடத்தேகாக்கிரமாகவைப்பது பத்தியுமாம்.

இவற்றில்சற்குருவினிடத்தில்மிகவும்விசுவாசம்பண்ணவேண்டியது-ஏன்பண்ணவேண்டியதென்றால்-அவர் மகிமைமுன்னதாக நிரூபிக்கிறோம்.

அகுதாவதுபிரார்த்திரகிதராயும்-பரிபூரணராயும்ஞானபத்திவைராக்கியசம்பன்னராயும்நிரந்தரசந்தோஷத்தையடைந்தவராயும் நித்தியதிருப்தி யடைந்தவராயும் சச்சிதானந்தப்பிரமஸ்வரூபராயும் தேசாகாலவஸ்து பரிச்சேதரகிதராயும் சுசாதிவிசாதி சுகதபேத ரகிதராயும் சட்பாவவிகாரரகிதராயும் சுத்தபுத்தமுத்தநித்திய பரமாநந்தஸ்வரூபராயும் சர்வபரிபூரண கருணை சாகரராயும் நிருவியாச்சிய-நிர்லேப-நிர்ச்சங்க-நிர்வாண-நிட்காம-நிரூப-நிரந்தர-நிர்வயவ-நிர்விசேஷானந்த-நிருபத்திரவநிபத்த-நிர்வேத்திய-நிர்குணநிரஞ்சன-நிச்சல-நிட்பிரபஞ்ச ஸ்வகுபராயும் அச்சேத்திய - அக்கிலேத்திய அசோஷிய-அதாகிய-அசல- அவாச்சிய-அநாமய-அட்சர-அப்பிரமேய-அசிந்திய-அந்நியபாகிய - அக்குரோத-அவிதர்க்கிய-அதிரிசிய-அநாசிரய-அநாதார- ஆனந்த-அகண்டாகார ஸ்வரூபராயும்விஸ்வைதைச்சபிராஞ்ஞைமுக்கதீதமான பிரத்தியைக்குசைதந்நியராயும்இரரணியகர்ப்ப வவ்வியாகிருதங்களையும்கின்றசர்வசாட்சி

யராயும் மூலப்பிரகிருதியகண்டாகார விருத்தியானந்த
விருத்தியதீதராயும் கிருதகிருத்தியராயும் ஸ்வரூபஞா
னமில்லாதமூடாள் மதமூத்திரபாத்திரமாயிருக்கப்பட்
டதேகமேநானென்றிந்தசரீரத்தைக்குறித்துவந்தஞா
னிவிருத்திகளும் சாதிவர்ணம்-குலம்- கோத்திரம்-ஆசி
ரமம்-நாமம்-வேஷமாதிகளும் சநநமரணங்களுநானென
ன்றுகொண்டிருக்கிறவர்களாய் சங்கற்பவிகற்பமாயிருக்கி
றமனதை நானென்றுகொண்டிருக்கிறவர்களாய் உசுவாச
னிசுவாசமாயிருக்கின்ற பிராணவாயுவை நானென்று
கொண்டிருக்கிறவர்களாய் ஆபாசமாயிருக்கிறசீவனை நா
னென்றுகொண்டிருககிறவர்களாய் சசவிஷாணம்போலி
ருக்கிறசூனியமேநானென்று கொண்டிருக்கிற வர்களாய
இவைமுதலான வநேகமதஸ்தர்களும் திரிசியங்களாய்-
பரிச்சின்னங்களாய் சர்வயவங்களாய் அனுர்த்த சடதுக்
கரூபங்களாய் அஞ்ஞானமுதலான தேகேந்திரிய பிரா
ணபுத்தியோநானென்றுகொண்டிருக்கிறவர்களாய் லோக
காமியாயிருக்கப்பட்டசிவனேநானென்றுகொண்டுகிஞ்
சிஞ்ஞனாய் சுத்தமூடசிரோமணியாயிருக்கிற பேர்கள்
கூடனிரோதுகமாய் சற்குருவினுடையவீக்ஷணத்துக்கு
ப்பாத்திரமானவர்களாகில் அவ்விட்சணதிசயத்தினற்சர்
வகன்மவிமுத்தாளாய் அவர்களிடத்திற்சேருவார்கள் அ

ப்படிச்சேர்ந்தவர்களுடைய பாவங்களும் ஜனமரணரூ பங்களாயிருக்கிற சகலபிராந்திகளும், சூனியம்பண்ணி த்தங்களைப்போலக்கிருதகிருத்தியராகச் செய்யப் பண்ணுகிறவ ராயுமிருப்பதாயும்.

சுலோகம்,

బహవో గురవస్సంతి శిష్యవిత్తాపహారకాః । దుర్లభో
ఽయం గురుర్దేవ శిష్యహృత్తాపహారకః॥ ౫

(இதனது பொருள்.)

சீடனதுகைப்பொருள் பறிக்கும்படியான வாசாரியர் வெகுபேருண்டு-அச்சீடனது மனத்தின்கண் ணுள்ள துன்பத்தைப் பறிக்கும்படியான வாசாரியர் கிடைப்ப தரிது

இப்படிக்குச்சாஸ்திரங்களிற் பிரமாணங்களிருக்கிற படியினாலு மிங்ஙனங் கிடைப்பற்கரிய சத்குருவினிடத் தினவசியமிகவும்விசுவாசம் வைக்கவேண்டியதுசித்தம்

இப்படியேவேதாந்தசாஸ்திரத்தினிடத்திலு மவசிய மிகவும் விசுவாசம்பண்ணவேண்டியதுஎன்பணணவே ண்டியதென்றால் வேதாந்த சாஸ்திரங்களிலு மகாமகி மைகளிருக்கின்றபடியினால் அம்மகிமையென்னவென் றால் அவ்வேதாந்த சாஸ்திரங்கள்சகலபிராந்திகளையுஞ் சூனியம்பண்ணுகிறதாகியும்ஜனனமரணமென்கிறசம்ச

ரசாகரந்தாண்டுகிறதற்குத் தெப்பமாகியும் ஸ்வகர்மகு
ணசாலமென்கிறமேகங்களைப் போக்கடிக்கிறபிரசண்ட
வாயுவாகியும் ஆதியாத்மீகமாதிபவ்திகாதிதெய்வீகமெ
ன்கிற தாபத்திரயாக்கினிகளைச் சாந்திபண்ணுகிறஅமி
ர்தவருஷமாகியும்புத்திரமித்திரகளத்திரபசுப்பிறத்திய
க்கிரகக்கிராமக்ஷேத்திர•தனதானியாதிகளிடத்திற்பிரி
யமோதப்பிரமோதமா யிருக்கின்றவஞ்ஞானமானமோ
காந்தகாரத்தைப்போக்கடிக்கிறசூரியப்பிரகாசமாகியும்
தானத்திரய-சங்கத்திரய-பந்தத்திரய-சீவத்திரய சக்த்
தித்திரய விந்துத்திரய தெயவத்திரய ஈஷணாத்திரயக்
ர்மத்திரய-க்ாரணத்ரய வாசனாத்ரயமான விவ்விலங்கு
களைப் பேதிக்கிறவச்சிராயுதமாகியும் இதரமான சப்த
மீமாம்ச மந்திரகர்மயோகநியாயமிவைமுதலானசாத்தி
ரங்கள் படித்துஞ்சுகதுக்கமோககர்மபந்த சனனமரணங்
களைநிரசனம்பண்ணமாட்டாமற் சமுச்சயங்களோடு கூ
டியனேகமயக்கங்களினன் மோட்சமாகிற கரையைக்கா
ணமலு மிருக்கிறபேர்கள்கூட தெய்வாதீனமாய்வேதாந்
தசாத்திரசிரவணம் பண்ணினலது 'சகலசமுசயங்களை
யுஞ்சகலபயதுக்க மோகாதிகளையுந்தள்ளி மோட்சகதி
யைக்காண்பிக்கிறதா யிருக்கிறபடியினலு மிந்தவேதாந்
தசாத்திரங்களின் பேரில் மிகவும்விசுவாசம்பண்ணவே
ண்டியதுசித்தம்.

இப்படியே ஈஸ்வரனிடத்திலுமவசியம்மிகவும்பத்தி பண்ணவேண்டியது ஏன் பண்ணவேண்டியதென்றால் சகலத்திற்கும் காரணராயும் பாவமும்கர்மமும்நாமமும்-ரூபமும் குணங்களுமில்லாமல்-உற்பத்திஸ்திதி-லயம்பண்ணுகிறநிமித்தம்-மிசமாயையினாற் சிவசகத்துக்களை விஸ்திரிக்கிறவராயும்-அச்சீவ சகத்துக்களி லனுகூதராயும்-அவ்வியாகிருத மிரணியகர்ப்ப விராட்டு-பிர்மா-விஷ்ணு-மகேஸ்வர-ராம்கிருஷ்ணாதி யவதாரராயும்-சத்குருரூபங்களாயு மிருக்கின்றபடியினா லந்தஈஸ்வரனைக்குறித்துச் சிரத்தாபத்தியோடும் உபாசனை பண்ணினாலதனாலீஸ்வரானுக்கிரக முண்டாயவ்வனுக்கிரகத்தினாற் சகலபாவங்களுநசித்துமோக்ஷத்தையடைகிறார்களாதலாலிந்த வீஸ்வரனிடத்தி லவசியமிகவும்பத்திபண்ணவேண்டியது சித்தம்,

இப்படிக் குருவேதாந்தவாக்கிய மீஸ்வரனிடத்தின் மிகவும் விசுவாசம்பண்ணுமைற்போனால் ஜநநமரணப் பிரவாகரூடமான சம்சாரதுக்கமென்கிற நரகத்தப்பாமலும்அஞ்ஞானமும் அவிவேகமும் அபிமானமும்-ராக கர்மசரீரதுக்க பயாதிகளு மிவைமுதலானசகலபிராந்திகளுஞ்சூனியமாகாமலு மிருக்கின்ற படியினாலவசியம் சற்குருவேதாந்த வாக்கியமீஸ்வரனிவர்களிடத்தின் மிகவுஞ்சிரத்தாபத்தி பண்ணவேண்டியதுசித்தம்.

இங்ஙனம் சமதமாதி குணங்களையுடைய சமாதிசட்
சசம்பத்தியான மூன்றாஞ் சாதனங்கைவந்தாற்போதா
தோவென்றாற்போதாது ஏன்போதாதென்றால்- சிலர்
தான்ஞானியெனவும்-யோகியெனவும்- குருக்களெனவு
வும்-பாரம் பரியமானபெரியோர்கள் வம்சத்திற்பிறந்த
வனெனவுஞ் சொல்லிக்கொண்டுமுன்னுள்ளமகான்கள்
பேரைவைத்துக்கொண்டு-அவர்கள் மகாமகிமையுள்ள
குணாதிசயங்கள் தங்களுக்கிருக்கிறதுபோலச் சமதமா
திகளை வரவழைத்துக்கொண்டு நிர்வியாசமாகச்சாந்தா
திகுணங்களையடைந்து மோக்ஷமெப்போது வருமென்
கிறவிசாரமில்லாமற் சோம்புமயக்கஞ்சமுசய மிவைக
ளையுடையவனைப் தேகசவுக்கியத்துக்காக வதற்குத்த
குந்த புசிப்பின்மிகவும் விருப்பமுள்ளவனாய் விசித்திர
மார்க்கங்களை யப்பியாசித்துக்கொண்டு ஞானம்போல
ச்சிலவார்த்தைகளைக் கற்றுக்கொண்டு - ஆத்மானந்தத்
தையடையாமன்மூடசிரோமணியாயிருப்பார்களாதலா
ல்நான் காஞ்சாதனமான முமூட்சுத்துவமும் வசியஞ்ச
ம்பாதிக்கவேண்டியது-அஃதாவது மோக்ஷ விருப்பமா
ம்-அதையு னிரூபிக்கிறோம்,

ஜநநமரணப் பிரவாகரூபமான சமுத்திரத்திலிருக்கி
றபேர் தாபத்திரங்களி லடிபட்டிந்தச் சம்சாரம் மகார
வுரவாதி நரகத்தைக்காட்டியு மதிகதுக்கமாயிருக்கிறப
டியினாலிச்சம்சாரத்தில் க்ஷணமாத்திரமாகிலு மிருக்க
லாகாதென்று மகாபயத்தையடைந்திப்படிப்பட்ட கோ

ரமான சம்சாரபயதுக்க மோகப்பிரமைகளைப் போக்க
டித்துநித்த-சுத்த-புத்த-முத்த-சத்திய பரமானந்தானந்
தாத்துவித-சுகஸ்வரூபமா யிருக்கப்பட்ட சாம்பிராச்சி
யத்தை எந்தப்பெரியோர்களா லடையலாகுமோ இப்ப
டிப்பட்டசற்குரு வெங்கேயிருக்கிறாரோ விதற்கென்ன
சாதனங்கள் வேண்டுமோவென்கிற விசாரத்தோடுந் த
லையினெருப்புப் பற்றினவனுக்கும்-நாக்கு வரண்டுபோ
னவனுக்குந்-தண்ணீரைக்கண்டாலொழிய ஒருகாரியத்
திலுமனது மீளாததுபோல வெப்போ மோக்ஷம் வரப்
போகிறதென்றெடுத்த விடாய்தீராமந் திருகிருத்திய
னுமளவும்விசாரத்தினாற் றபித்துக்கொண்டிருக்கிறதே
முமூட்சுத்துவமென்று சொல்லப்படும்.

இந்தமுமூட்சுத்துவ மில்லாவிட்டாற்ஜனநமரணமெ
ன்கிறநரகம்விடாது பந்தமும்போகாதானபடியினாலெ
வ்விதத்தினு முமூட்சுத்துவஞ் சம்பாதிக்கவேண்டியது
சித்தம்.

இச்சாதனங்களுள்ளவனே பிரமவிசாரத்துக்கதிகா
ரியானவன்-அவ்விசாரமாவது சடமின்னதென்றறிந்து அ
தைநீக்கிச் சத்தையறிகிறதற்குச் சற்குருதரிசனமாயவ
ரிடத்தின்மகாவாக்கிய உபதேசம்பெற்றுக்கொண்டுவே
தாந்தமகாவாக்கியார்த்தநிச்சயமான சிவபரவைக்கன்
றாகவிசாரித்தவைகளொன்றான வனுபவமுண்டாகவி
சாரிப்பதே விசாரணையாம்,

அஃது வேண்டுமென்பதற்குத் திட்டாந்தம் பசிக்க ன்னம் வேண்டினவனுக் கதற்குச்சாதனமான இடம்-வி றகுபாத்திரம்-சலம்-அரிசி இவைகளிருக்கினும்பசியை ப்போக்கடிக்கமாட்டாது-இவைகளுடனே அக்கினியொ ன்றுகூடினு லவ்வரிசியையன்னமாகப்பாகம் பண்ணிய ச்சாதனங்களுடனே தானுகட்டமாயச் சாடராக்கினிரூ பமாயிருந்துகொண்டு முன்பாகம் பண்ணின வன்னத் தைப்புசித்துப் பசிநீங்கி யச்சாடராக்னியுந்திருத்தியா காரமாஎப்படிசுகமாயிற்றேவப்படியேஆத்மவிசாரமெ ன்னுமக்கினிபிறந்து குருவென்கிறவிடத்தில வியாபித் து-வேதாந்தசாத்திரமென்கிற விறகினுற் பிரகாசித்து மானிடசன்மமென்கிற பாத்திரத்திற் சாந்தகுணமென் கிறசலத்திற் சையோகமாய் அறிவென்கிற வரிசியைப் பாகம்பண்ணி-அவ்விசாராக்கினியுமுன்னுள்ள சாதன ங்களோடுகூட்டமாய்த்தான்சமைத்தான் சமைத்தபூரண மானவன்னத்தைப்புசித்து ஜநந மரணமென்கிற துக்க மானபசிநீங்கி-தனக்கெதிரிலாத வத்துவிதானந்த திரு ப்தியை யடைந்தத்திருப்தியினுற் சலத்திலுண்டானவு ப்புச்சலாகாரமாவதுபோல ஞானனந்தத்திலுண்டான விசாரமும் ஞானனந்தாகாரமாய் மோட்ச மடையவே

ண்டுமாதலாலச்சாதனசதுஷ்டயமுள்ளவற் கிவ்விசாரம வசியமபண்ணவேண்டியதுசித்தம்.

சாதனசதுஷ்டயப் பிரகரணம்-சம்பூரணம்.

௨

மூன்றாவது.

தூலப்பிரகரணம்.

முதற்பிரகரணத்திற் சித்தசுத்திக்குச் சுதந்தரமாம சாதனசதுஷ்டயத்தினாற் றிரிசியரூபமான பிரபஞ்சமனைத்தும்-அனித்தியமெனவும் திருக்குரூபமான பிரமனித்தியமெனவும் அறிவித்தவ்வனித்தியத்தைநீக்கிமுத்தியத்தை யடைவதற்கேதுவானகுணங்களோடுமுத்திவிருப்பத்தைவருவித்துப் பின்னிப் பூதடவுநிகமான பிரபஞ்சமுண்டான கற்பனைகளைத் தெரிவித்தவைகளை நீக்குதற் பொருட்டுமுன்பு தூலப்பிரகரண னிரூபிக்கிறார்,

சுலோகம்

మృగతృష్ణాయాం ముదకంశుక్తౌ రజతంభుజంగో మాలా

జ్యామ్ । మయిలసకిచంద్రయుగవదాభ్రాంతస్మిఖిలం జగ

ద్రూపమ్॥

இதனது பொருள்.

கானலிடத்திற் சலம்போலவும் கிளிஞ்சலினிடத்தில் வெள்ளிபோலவும் பழுதையினிடத்திற்பாம்புபோலவுஞ் சந்திரனிடத்திற்றுவித்தியம்போலவும் என்னிடத்திற்சகல பிரபஞ்சமும் பிராந்தமாகக்காணகிறதுஇங்ஙனமிருக்கிறபடியால்.

மருமரீசிகையினிடத்திற் ஜலப்பிராந்தியெப்படியோ சுத்தியினிடத்தில் ரசிதப்பிராந்தியெப்படியோ ரச்சுவினிடத்திற்சற்பப்பிராந்தியெப்படியோ சந்திரனிடத்திற்றுவிதப்பிராந்தியெப்படியோ அப்படியேநிட்பிரபஞ்சஸ்வரூபமான தன்னிடத்தின்மூலப்பிரகிருதிமகதத்துவம் அகங்காரதத்துவம் பஞ்சதன்மாத்திரைசூட்சுமபூதாலம் இவைமுதலானசகத்பிராந்திதோன்றுகிறது இந்தச்சகற்பிராந்தியாகினற்றோன்றுகிறதென்றால் அதிஷ்டானஞ்ஞானத்தினற்றோற்றுகிறது இப்படித்தோற்றுகிற சகத்பிராந்திமருமரீசிகையினிடத்திற் சலக்காலத்திரயத்திலுமெப்படியில்லையோசுத்தியினிடத்தில்வெள்ளிகாலத்திரயத்திலுமெப்படியில்லையோ-ரச்சுவினிடத்திற்சர்ப்பங்காலத்திரயத்திலு மெப்படியில்லையோ-சந்திரனிடத்திற்றுவிதங் காலத்திரயத்திலு மெப்படியில்லையோ அப்படியேநிட்பிரபஞ்ச ஸ்வரூபமான தன்னிடத்திலதிட்டஞ்ஞான மென்கின்றமூலப்பிரகிருதிமகதத்துவம்

அகங்காரதத்துவம் பஞ்சதன்மாத்திரை சூட்சுமம் தூலமாதியான சகத்பிராந்தி காலத்திரயத்திலு மில்லவேயில்லை-அதுதில்லாமற்போனபிரகாரமெப்படியென்றுக்கிரமமாகச்சொல்லுகிறோம்.

சுலோகம்,

సచ్చిదానందస్వరూపే స్వాత్మన్యారోపితం వపుః। స్థూ
లంతస్యసరూపంతు తావత్త్రైఃరూప్యతే॥ ౭

இதனதுபொருள்.

சச்சிதானந்தஸ்வரூபமான தன்னிடத்தில் தூலசரீரம் ஆரோபிக்கப்பட்டிருக்கிறது அதனது ஸ்வரூபமானது னிரூபிக்கப்படுகிறது.

சுலோகம்.

అస్థిమాంసత్వచోనాడీరోమచైవయథాతథా । క్షితేః
పంచవిధాప్రోక్తాస్సమాంశాః పరికీర్తితాః॥ ౮

இதனதுபொருள்

அஸ்தி-மாம்ஸ-சாமசம்-நரம்பு-ரோமம்-ஆகப் பிருதிவியம்சம்ஐந்து,

இதற்குவிபரம்-பிருதிவியிடத்திற் பிருதிவி-அஸ்தி பிருதிவியிடத்திலப்பு-மாமிசம் பிருதிவியிடத்தி லக்கினிசாமம்-பிருதிவியிடத்தில்வாயுநரம்புகள் பிருதிவியிடத்திலாகாசம் ரோமங்களிந்த வைந்தும் பிருதிவியின் கூறு.

சுலோகம்

లాలామూత్రంతథాస్వేదశ్శుక్లంశోణితమేవచ । అప
పంచవిధాఃప్రోక్తాస్సమాంశాఃపరికీర్తితాః ॥ ౯

இதனதுபொருள்

வாய்நீர்-மூத்திரம்-வியர்வை-உதிரம்- சுக்கிலம்-ஆக-அப்புவினம்சம் ஐந்து-

இதற்குவிபரம் அப்புவினிடத்திற்பிருதிவி வாய்நீர்-அப்புவினிடத்தி லப்புமூத்திரம் அப்புவினிடத்தி லக்கினிவியர்வை அப்புவினிடத்தில்வாயு விரத்தம் அப்புவினிடத்திலாகாசஞ் சுக்கிலம் இந்தவைந்து மப்புவின் கூறு.

சுலோகம்

క్షుధాతృష్ణాతథానిద్రా ఆలస్యంసంగమస్తథా । అ
గ్నేఃపంచఫఃప్రోక్తస్సమాంశాఃపరికీర్తితాః ॥ ౧౦

இதனது பொருள்.

பசி-தாகம் நித்திரை சோம்பல்-சங்கமம்-ஆக அக்கினியினம்சம்ஐந்து.

இதற்குவிபரம் அக்கினியினிடத்திற்பிருதிவிபசி அக்கினியினிடத்திலப்புதாகம் அக்கினியினிடத்திலக்கினிநித்திரை அக்கினியினிடத்தில் வாயுவாலஸ்யம் அக்கினியினிடத்திலாகாசஞ்சங்கமம் இந்தவைந்துமக்கினியின் கூறு.

சுலோகம்

ధావనం వల్గనం చైవ వకుంచనం చ ప్రసారణమ్ । వాయుః
పంచవిధ ప్రోక్తస్సమాంశాః పరికీర్తితాః ॥ ౧౧

இதனதுபொருள்

ஓடுதல் சுருங்குதல் குறுகுதல்விரிகுதல் கிடத்தல்ஆக-வாயுவினம்சம் ஐந்து.

இதற்குவிவரம்-

வாயுவினிடத்திற் பிருதிவிகிடத்தல்வாயுவினிடத்திலப்புகடத்தல் வாயுவினிடத்திலக்கினியிருத்தல்வாயுவினிடத்தில் வாயுவோடல்வாயுவினிடத்தி லாகாசம்தத்தல் இந்தவைந்தும்வாயுவின்கூறு

சுலோகம்,

రాగద్వేషభయం లజ్జా మోహశ్చైవ యథాతథా ।
నభః పంచవిధః ప్రోక్తం సమాంశాః పరికీర్తితాః ॥ ౧౨

இதனதுபொருள்

ராகம்-துவேஷம்-பயம்-வெட்கம்-மோகம்- ஆகவாகாசம்சம்-ஐந்து

(இதற்குவிவரம்)ஆகாசத்தினிடத்திற்பிருதிவு ஆசை ஆகாசத்தினிடத்திலப்பு துவேஷம்-ஆகாசத்தினிடத்திலக்கினிபயம்-ஆகாசத்தினிடத்தில் வாயுவெட்கம் ஆகாசத்தினிடத்திலாயாசம் மோகம்இந்தவைந்து மாகாசத்தின்கூறு.

ஆகவிந்தவிருபத்தைந்து தத்துவங்களுங் கூடித்தூலசரீரமாமிவையுண்டானவிபரஞ் சொல்லப்பட்டது

இந்தத்தூலசரீரத்தினிடத்தி லிந்திரியங்களிருக்கிற வயவஸ்தானங்களின் விபரம் பிருதிவினிடத்தி லாகாசமாங்காரம் ஸ்தானமிருதயம் பிருதிவியினிடத்தில்வாயுபிராணவாயுஸ்தானமிருதயம் பிருதிவியினிடத்திலக்கினி கிராணேந்திரியஸ்தானம்-நாசி-பிருதிவியினிடத்திலப்புகந்ததன் மாத்திரை பிருதிவியினிடத்திற் பிருதிவி குதேந்திரியம்ஸ்தானங்குதம்

சுலோகம்

అహంచప్రాణవాయుశ్చ నాసికాగంధమేవచ । పా
యుపంచవిధః ప్రోక్తః ఇత్యేతద్భూమిపంచకమ్॥ ౧౩

(இதனதுபொருள்)

இந்தவகங்காரம் பிராணவாயு கிராணேந்திரியம் கந்தவிஷயம்-குதேந்திரியம் ஆகவைந்தும் பிருதிவி பஞ்சீகிருதி.

அப்புவினிடத்திலாகாசஞ் சித்தம்ஸ்தானம்-காமீ அப்புவினிடத்தில்வாயு அபானவாயு ஸ்தானங்குதம்-அப்புவினிடத்திலக்கினிசிகுவை யிந்திரியம் ஸ்தானஞ் சிகுவை அப்புவினிடத்திலப்புரசதன்மாத்திரை அப்புவினிடத்திற்பிருதிவி குய்யேந்திரியம் ஸ்தானங்குய்யம்.

சுலோகம்

చిత్తంచాపానవాయుశ్చ జిహ్వారససమేవచ। గుహ్యం
పంచధః ప్రోక్తః ఇత్యేతజ్జలపంచకే॥ ౧౪

(இதனதுபொருள்)

இந்தச்-சித்தம்-அபானவாயு-சிகுவை-யிந்திரியம்-ரசவிஷயம்-குய்யேந்திரியம்-ஆகவைந்தும்-அக்கினிபஞ்சகிருதி

அக்கினியினிடத்திலாகாசம் புத்திஸ்தானம் நேத்திரம் அக்கினியிடத்தில்வாயு வுதானவாயுஸ்தானங்கண்டம்-அக்கினியினிடத்திலக்கினி-நேத்திரேந்திரியம் ஸ்தானமநேத்திரம்-அக்கினியினிடத்திலப்பு ரூபதன்மாத்திரை அக்கினியினிடத்திற்பிருதிவிபாதேந்திரியம் ஸ்தானம்பாதம்,

சுலோகம்

బుద్ధిశ్చోదానవాయుశ్చ నేత్రంరూపంతథైవచ। పాణి
పంచవిధః ప్రోక్తః ఇత్యేతద్వహ్నిపంచకే॥ ౧౫

(இதனதுபோருள்,)

இந்தபுத்திஉதானவாயு நேத்திரேந்திரியம்ரூபவிஷயம்பாதேந்திரியம்ஆகவைந்தும்அக்கினிபஞ்சகிருதி

வாயுவிடத்திலாகாசம் மனதுஸ்தானங்கண்டம்வாயுவினிடத்தில் வாயுவியானவாயு-ஸ்தானம்-சர்வசரீரம்வா

புவினிடத்தி லக்கினிதொக்கேந்திரியம் ஸ்தானந்தொக்கு வாயுவினிடத்திலப்பு பரிசதன்மாத்திரை வாயுவினிடத்திற்பிருதிவிபாணீந்திரியம்ஸ்தானம்-அஸ்தம்-

சுலோகம்.

మానసం వ్యానవాయుశ్చ చర్మస్పర్శశ్చ హస్తశ్చ
పాదః పంచవిధః ప్రోక్తః ఇత్యేతద్వాయుపంచకమ్॥ ౧౮

(இதனதுபொருள்)

இந்தமனதுவியானவாயு தொக்கேந்திரியம் பரிசவிஷயம்பாணீந்திரியம் ஆகவிந்தவைந்தும் வாயுவு பஞ்சிகிருதி,

ஆகாயத்தினிடத்தி லாகாசஞ்ஞானம்ஸ்தானம் புருவமத்தியம்-ஆகாசத்தினிடத்தில்வாயுசமானவாயு ஸ்தானம்நாபிஆகாசத்தினிடத்திலக்கினிசுரோத்திரேந்திரியம் ஸ்தானஞ்செவி ஆகாசத்தினிடத்திலப்புசத்த தன்மாத்திரை ஆகாசத்தினிடத்திற்பிருதிவிவாகிந்திரியம்ஸ்தானம் வாக்கு,

சுலோகம்

జ్ఞానం సమానవాయుశ్చ శ్రోత్రం శబ్దస్తథైవచ। వాక్చ
పంచవిధః ప్రోక్తః ఇత్యేతద్వ్యోమపంచకమ్॥ ౧౯

இதனதுபொருள்.

இந்தஞானம் சமானவாயு சுரோத்திரேந்திரியம் சத்த விஷயம் வாக்கிந்திரியம் ஆகவிந்தவைந்து மாகாச பஞ்சிகிருதி.

இந்த விந்திரியங்களிருக்கிற ஸ்தானமான தூல சரீரம்பஞ்சிகிருதி பஞ்சமகாபூதங்களினாலானது-இதற்குச்சம்மதிவசனம்.

சுலோகம்.

పంచీకృతమహాభూతసంభవంకర్మసంచితం।శరీరం
సుఖదుఃఖానాంభోగాయతనముచ్యతే॥ ౧౮

பஞ்சிகிருத பஞ்சமகாபூதத்தினின்றுமுண்டாகியும் கர்மசஞ்சிதமாயும் சுகதுக்கங்களுக்கிடமாயு மிருக்கின்றது தூலசரீரமென்றாசாரியசுவாமிகளாத்ம போதமென்கிறகிரந்தத்தி னிரூபித்திருக்கிறா ரானபடியினாலுஞ் சுருதிகளிற் சொல்லப்பட்டிருக்கிறபடியினா லிதுவே பிரமாணம்.

தன்னிடத்தி லத்தியஸ்தமாய்த்தோற்றுகிற விந்தப்பஞ்சிகிருத பஞ்சமகா பூதங்களினாற்கற்பிதமான விந்தூலசரீரந்தானல்ல-அஃதெப்படித்தானல்லவென்றால் இந்த அஸ்திமாமிசம்சருமம் நரம்புரோமம் இந்தவைந்தையு மறிந்தவறிவேதான் தன்னாலறியப்பட்ட விந்தவைந்துந் தன்னை யறியமாட்டாதாகையாற் சடம் இந்த வைந்துந்

தானல்ல-இந்தவைந்தும் பிருதிவியினம்சமாம் - இந்தவைந்தினுடைய ஹானிவிருத்திகளினால் வருகிறசுகதுக்கங்கள்தனக்கில்லை இந்தவைந்துமேதானானாலிந்தவைந்தும்போனாற்றான் போகவேண்டுமே இந்த வைந்தும் போனாலுந் தான்போகவில்லையே ஆகையாலிவ்வைந்துக்குஞ் சாட்சியாயறிகிற வறிவேதான்,

இப்படியே-வால்-நீர-மூத்திரம்-வியாவை- உதிரம்-சுக்கிலம்-இந்தவைந்தையு மறிந்தவறிவேதான்தனாலறியப்பட்ட விந்தவைந்துந்தன்னையறியமாட்டாதாகையாற்சடம இவ்வைந்துந்தானல்ல இந்தவைந்தும் அப்புவினம்சமாம்-இந்தவைந்தினுடையஹானிவிருத்திகளினால்வருகிற சுகதுக்கங்கள் தனக்கில்லை இவ்வைந்துமேதானானால்இந்தவைந்தும்போனாற்றான் போகவேண்டுமே இந்தவைந்தும்போனாலுந் தான்போகவில்லையே ஆகையாலிந்த வைந்துக்குஞ் சாட்சியாயறிகிறவறிவேதான்.

இப்படியே-பசி-தாகம்-நித்திரை-ஆலஸ்யம்-சங்கமம் இந்தவைந்தையுமறிந்தவறிவேதான்தன்னாலறியப்பட்ட விந்தவைந்துந்தன்னை யறியமாட்டாதாகையாற்சடம்,

இந்தவைந்துந்தானல்ல-விந்தவைந்து மக்கினியினம்சமாம்-இந்தவைந்தினுடைய ஹானிவிருத்திகளினால்வருகிறசுகதுக்கங்கள தனக்கில்லை இந்தவைந்துமேதானானாலிந்தவைந்தும் போனாற்றான்போகவேண்டுமே இந்

தவைந்தும் போனாலுந்தான்போகவில்லையே ஆகையா லிந்தவைந்துக்குஞ் சாட்சியாயறிகிற வறிவேதான்,

இப்படியே கிடத்தல் நடத்தல்இருத்தல் ஓடல்தத்தல்இந்தவைந்தையு மறிந்தவறிவேதான்-தன்னாலறியப்பட்டவிந்தவைந்துந்தன்னை யறியமாட்டாததாகையால்-சடமிந்தவைந்துந்தானல்ல இந்தவைந்தும் வாயுவினம்சமாம்-இந்தவைந்தினுடைய ஹானிவிருத்திகளினால் வருகிறசுகதுக்கங்கள் தனக்கில்லைஇந்தவைந்துந்தானானா லிந்தவைந்தும் போனாற்றான் போகவேண்டுமே இந்தவைந்தும்போனாலுந் தான் போகவில்லை ஆனபடியினா லிந்தவைந்துக்குஞ் சாட்சியாயறிகிற வறிவேதான்.

இப்படியே-ஆசை-துவேஷம்-பயம்-வெட்கம்-மோகம்இந்தவைந்தையுமறிந்த வறிவேதான்-தன்னாலறியப்பட்டவிந்தவைந்துந்தன்னையறியமாட்டாததாகையாற்சடம் இந்த வைந்துந்தானல்ல விந்தவைந்து மாகாசத்தினம்சமாம்;

இந்தவைந்தினுடைய ஹானிவிருத்திகளினால் வருகிறசுகதுக்கங்கள் தனக்கில்லைஇந்தவைந்துந் தானானா லிந்தவைந்தும் போனாற்றான் போகவேண்டுமே இந்தவைந்தும்போனாலுந்தான் போகவில்லையே ஆனபடியா லிந்தவைந்துக்குஞ் சாட்சியாயறிகிறவறிவேதான்.

இந்தப்பிருதிவிபஞ்சகமும் அப்புபஞ்சகமும் அக்கினிபஞ்சகமும் வாயுபஞ்சகமும் ஆகாசபஞ்சகமுமாகி யவிவ்வைந்து பஞ்சகங்களுங்கூடி தூலசரீரமாச்சுது,

இதைத்தூலசரீரமென்றறிந்தவறிவேதான் தன்னாலறியப்பட்ட விந்தத்தூலசரீரந்தன்னை யறியமாட்டாதாகையாற்சடம் இந்தத்தூலசரீரந்தானல்ல விந்தத்தூலசரீரம் பஞ்சிகிருதபஞ்சமகா பூதங்களினாலாவது இந்தத்தூலசரீரத்தினுடைய ஹானிவிருத்திகளினால் வருகிற சுகதுக்கங்கள் தனக்கில்லை-இந்தத்தூலசரீரமே தானானலித்தத்தூலசரீரம் போனாற்றான் போகவேண்டுமே இந்தத்தூலசரீரம் போனாலுந்தான் போகவில்லையே எப்படித்தான் போகவில்லையென்னிற் பூருவத்திற்றன்சரீரத்தோடுமிருந்து பண்ணினதருமத்தினாற் றனக்கிந்தச்சரீரம்வந்ததென்றும் இந்தச் சரீரத்தினாற் பண்ணினகருமத்தினாற்றனக்கினிமேற் சரீரம்வரப்போகிறதென்று மிந்தச்சரீரத்திற்கு விலட்சணமான தன்னையறிந்தாற்றனக்கினிமேற்சரீரம் வராதென்றுமனுபவ மிருக்கிறபடியாற் பூதபவுஷிய வர்த்தமானகாலத்திரயங்களிலுமிந்தச்சரீரமிருந்தாலும் போனாலுந்தான் போகவில்லையே ஆனபடியினாலிந்த வியஷ்டி தூலசரீரந்தானல்ல

இந்தவியஷ்டி தூலசரீரத்துக்குச்சாட்சியா யறிகிற வறி
வேதான் இதற்குச்சம்மதிவசனம்.

சுலோகம்

నత్వేవాహంజాతునాసంనత్వంనేమేజనాధిప । నచై
వనభవిష్యామ్యసర్వేవయమతఃపరమ్॥ ౧౯

(இதனது பொருள்.)

நானொருக்காலு மிராமலிருந்தவனல்ல நீயுமிராமலி
ருந்தவனல்லஇந்தவிராசாக்களு மிராமலிருந்தவர்களல்
லாமெல்லாருமேலில்லாமற் போகிறவர்களு மல்லவெ
ன்றுகீதையிற்பகவா னிருபித்திருக்கிறார்.

சுலோகம்

ఘటద్రష్టాఘటాద్భిన్నః సర్వథానఘటోయథా । దే
హద్రష్టాతథాదేహోనాహమిత్యవధారయ॥ ౨౦

(இதனது பொருள்,)

கடத்தைககாண்கிறவன் கடத்துக்குவேறாய்க் கடமா
காததுபோலத்தேகத்தைக் காண்கிறதாலுந் தேகமல்ல
வென்றறிக என்றாசாரியசுவாமிகளவாக்கியவிருத்தியெ
ன்கிறக்கிரந்தத்தி னிருபித்திருக்கிறானபடியினா லிது
வேபிரமாணசித்தம்

இந்தவியஷ்டி தூலசரீரத்துக்குச் சாட்சியானதானே
பிரமாதிபிபீலிகாந்தமான சமஷ்டி தூல சரீரங்களிலும
பஞ்சீகிருதபஞ்சமகாபூதங்களென்கிறதுசிபூதங்களிலு

மற்று நுதாமாயிருந்துகொண்டு சாட்சியாயறிகிறபடியினு
லிந்தச்சமஷ்டி தூலசரீரங்களுக்குக்காரணமான பஞ்சீ
கிருத பஞ்சமகாபூதங்களென்கிற தூலபூதங்களுந்தான
ல்லவெப்படித்தானல்ல வென்னின்றனக்கெதிரேதோற்று
ந சமஷ்டிவியஷ்டியாத்மகமான தூலசரீரங்களிடத்திலு
மிதற்குக்காரணமான பஞ்சீகிருதபஞ்சமகாபூதங்களெ
ன்கிறணீலபூதங்களிடத்திலும் அந்நியஸ்தமாய்த்தோ
ற்றுகிற விசுவன்வியாவகாரிகனும்விராட்டுவைஸ்வான
ரனு மென்கின்றவபிமானநாமங்களுஞ்சாக்கிராவஸ்தை
யும்நேத்திரஸ்தானமும் புக்தபோகமும் அகாரமாத்தி
ரையும் ரசோகுணமும் கிரியாசக்தியும்பிரமமூர்த்தியு
ம் அன்னமயகோசமும் சீவத்துவமும்மனுஷியத்துவமு
ம்நான்கர்ப்பஸ்தனுகப்பிறந்தவன் நான்பாலன்நான்குமா
ரன் நான்யுவன் நான்விருத்தன் நாசிரணித்துப் போகி
றவனென்னுமிச்சட்பாவ விகாரங்களுஞ்சடாதாரமென்
கிறநாமங்களுப்லட்சியத்திரயங்களென்கிறநாமங்களும்
நான்புருஷன் நான்ஸ்திரீ நான்நபுஞ்ஸகனென்கிறலிங்க
த்துவமும் நான்பிராமணன் நான்க்ஷத்திரியன்நான்வை
சியன்நான்சூத்திரனென்கிற வர்ணத்துவமும்நான்றமி
ழன்நான்றெலுங்கன் நான்கர்னாடன் நான் மராஷ்டகன்
நான்குர்ச்சரனென்கிற பஞ்சதிராவிடங்களும் நான்க

சிவகோத்திரம் நான்பரத்வாசகோத்திரம் நான்போதா
யனசூத்திரம் நான்ஆசுவலாயனசூத்திரம்நான்ஆபஸ்த
ம்பசூத்திரம் நான்காத்தியாயனசூத்திரமென்கிற கோத்
திரசூத்திரங்களும் நான்பிரமசாரிநான்கிரகஸ்தன்நான்
வானப்பிரசித்தன் நான்சந்நியாசியென்கிற ஆசிரமங்க
ளும் நான்கிருஷ்ணன்நான்ராமன் நான்எல்லப்பட்டன்
நான்சுப்பபட்டனென்கிற குறிநாமங்களும்நான்கறுத்
தவன் நான்சிவத்தவனென்கிறரூபங்களும் நான்தீட்சத
ன்நான்சோமயாகிநான்பிரிதிவிவசந்தயாகிநான் மஹா
விரதயாகி நான்பவுண்டரீகயாகி என்கிறசமஸ்தநாம
ங்களும் நான்மாயாவாதி நான்தத்துவவாதியென்கிறவா
தநாமங்களும்நான்வாத்தியார்நான்கர்மடன்நான்பக்தன்
நான்ஞானி நான்கலியாணப் பிள்ளையென்கிற ஆசார
நாமங்களும் நான்தச்சன்நான்தட்டான் நான்கொல்லன்
நான்குசவன் நான்அம்பட்டன் நான்வண்ணான் நான்இ
டையனென்கிறவிருத்திநாமங்களும் நான்கூலிக்காரன்
நான்சாஸ்திரிநான்மாவுத்தன் நான்மணியக்காரன்நான்
கணக்கப்பிள்ளையென்கிற கிரியாநாமங்களும்நானாவித-
நாமங்களும்பிரமாவிஷ்ணு மயேஸ்வரன்சூரியன்நட்சத்
திரம்தேவகந்தருவசித்தசாத்தியகின்னரகிம்புருஷகுப்
யக அப்ஸரவித்தியாதர யட்சராட்சத பூதப்பிரேதபிசா
சசாகினிடாகினிவேதாளாதிதாம்பிரமிருண்மயசிலாதா,

ரூபங்களென்கிறதேவநாமத்துவமும் கோ இடப அசுவகார்த்தபசிங்கசார்த்தூல சிவாளமார்ச்சார மக்கடாதி மிருகநாமங்களும கருடன்மசகமாதிபட்சி நாமங்களும் பன்வகாதிஷூர்வனநாமங்களுள் மச்சக்கூர்மாதி நீர்வாழ்வன நாமங்களும்-கற்பகம்-மந்தாரம்பாரிசர்தம்நாளிகேரம் தாளிஅசுவத்தாதி விருட்சநாமங்களும் மகாமேரு சித்திரகூடம் திரிகூடம் சத்வகுலபர்வதாதி பர்வதநாமங்களும் சுவர்க்கமத்தியபாதாளாதி சதுர்த்தசபுவனங்களும் நவகண்டஞ்சத்ததீபங்குருக்ஷேத்திரங் காசிக்ஷேத்திரந் துவாரகாக்ஷேத்திரமுதலான் புண்ணியக்ஷேத்திராதிபிருதிவிநாமங்களும் சத்த சமுத்திரம் க்ங்கையமுனை சரஸ்வதிதுங்கபத்திரா கோதாவரிகிருஷ்ணை காவேரிமுதலிய புண்ணியதீர்த்தாதிசல நாமங்களும் வடவானலம் ஆஹாவானலம் காருகபத்தியம்தஷணாக்கினி அக்கினிஹோத்திரம் சடராக்கினியாதியான அக்கினி நாமங்களும் மலையமாருதம் பிரசண்டமாருதமென்கிற வாயுநாமங்களும் அசரீர அவகாசதசதிக்குப்பன்சாகாசம்வெளியென்கிற ஆகாசநாமங்களும் இத்தத்தூலப்பிரபஞ்சத்தைக்குறித்துச்சொல்லப்பட்டசத்தசாஸ்திரந்தர்க்கசாத்திரம்மீமாம்சசாஸ்திரம்யோகசாஸ்திரம்வேதாந்தசாஸ்திரங்களுமிவைமுதலானவிர்தவியஷ்டிசமஷ்டிதூலப்பிரபஞ்சத்தின்மேற்றோன்றுகிற சகலவித்தியாச

ங்களும் - இதற்காதாரமான தூலப்பிரபஞ்சமும்- சசவி
ஷாண வந்தியாபுத்திரககனாரவிந்தமித்தியா புருஷன்
போலவே காலத்திரயத்திலேயுந் தனக்கில்லை- அஃதெ
ப்படியெனில் - அஸ்திமரங்களைக்குறித்துத்தூலமென்
று சொல்லுவோமென்றால் அவைகட்குவெவ்வேறு நாம
ங்களிருக்கிறபடியினாலும் - அவயவங்களைக்குறித்துத்
தூலங்களென்றுசொல்லுவோமென்றால் - அவயவங்க
ளுக்கு வெவ்வேறு நாமங்களிருக்கிறபடியினாலும்-குட்
டை செட்டையைக்குறித்துத் தூலங்களென்று சொல்
லுவோமென்றால்- குட்டைசெட்டைகளுக்கு வெவ்வேறு
நாமங்களிருக்கிறபடியினாலும் - பஞ்சீகிருதபஞ்சமகா
பூதங்களைக்குறித்துத் தூலங்களென்று சொல்லுவோ
மென்றால்- பஞ்சீகிருத பஞ்சமகாபூதங்களுக்கு வெவ்
வேறுநாமங்களிருக்கிறபடியினாலும்- அந்தப்பஞ்சமகா
பூதங்கள் சத்ததன்மாத்திரையைவினா ஆகாசமில்லை- ச
த்தபரிசதன்மாத்திரைவினாவாயுவில்லை- சத்தபரிசரூப
தன்மாத்திரையைவினா-அக்கினியில்லை-சத்தபரிச ரூப
ரசதன்மாத்திரையைவினா அப்புவில்லை-சத்தபரிச ரூப
ரசகந்ததன்மாத்திரையைவினா-பிருதிவியில்லை- ஆனப
டியினாலிந்தப் பஞ்சீகிருதபஞ்சமகா பூதங்கள்-அபஞ்சீ
கிருதமானபஞ்சதன்மாத்திரையைத் தவிரவில்லை-ஆக
லாலிந்த அபஞ்சீகிருதமான பஞ்சதன்மாத்திரைகளிட

த்திலத்தியஸ்தமானக் கெதிராசந் தோற்றுகிறபஞ்சம
காபூதக்களென்கிற தூலபூதங்களுடைய காரிய
மானபிரமாதிபிபீலிகாந்தமான சமஷ்டிவியஷ்டிதூல ச
ரீரங்களும் - இதன்மேல் அத்தியஸ்தமான நாமங்களுமி
தைக்குறித்துவருகிற ஆபாசங்களும் சசவிஷாணவந்
தியாபுத்திரக்களைவிந்தமிந்திரியாபுருஷன்போலவேகா
லத்திரயத்திலுந் தனக்கில்லவேயில்லை இதற்குச்சம்ம
திவசனம்.

இத்தூலசரீரத்தின்பேரில் அத்தியஸ்தமாய்த் தோற்
றுகிற பிராமணத்துவஞ்சரீரத்தைக்குறித்து சொல்லு
வோமென்றால் சரீரம் க்ஷத்திரியாளுக்கிருக்கிற படியி
னாலும்-குடுமிபூணநூலைக்குறித்துச்சொல்லுவோ மெ
ன்றால்-அக்குடுமிபூணநூல்மண்ணுடையானுக்கிருக்கி
றபடியினாலும் அவயவங்களைக்குறித்துச்சொல்லுவோ
மென்றால்- அவ்வவயவங்களுக்குவெவ்வேறுநாமங்களிரு
க்கிறபடியினாலுந்-தாய்தகப்பன்பிராமணனானபடியினா
லவர்களைக்குறித்துச்சொல்லுவோமென்றால் தாய்தகப்
பனுண்டானநகதந்தகேசமல மூத்திரங்களுக்கும் பி
ராமணத்துவம்வரவேணும்-அப்படிவரவில்லையாதலா
லிந்தபிராமணத்துவாதிநாமங்கள்பிள்ளைகள் விளையாட்
டினாற்பெயர்வைத்துக் கொண்டாப்போலச் சொல்லப்
பட்டதேயல்லாமற் பரமார்த்தமாகக்காலத்திரயத்திலு
ந்தனக்கில்லையென்று விவேகசாரமென்கிற கிரந்தத்தி

ஸ்வாசுதேவசுவாமியார்நிரூபித்திருக்கிறதும் பூபாலகா விருட்சத்திற்குருவுண்டாச்சுது தாருவிற் பல்லக்குண்டாச்சுது இதுவிருட்சமென்றுந்தாருவென்றும்பெயரில்லேசனங்களுந்தானேபல்லக்கிலேறிவருகிறானென்றுசொல்லுவார்களேயல்லாமல் ராசாவிருட்சத்தின்பேரிலேறிவருகிறானென்றுந்தாருமேலேறிவருகிறானென்றும் ஒருவருஞ்சொல்லவில்லை பல்லக்குத்தாருவினாற்பண்ணப்பட்டதேயல்லாமல்வேறல்லஅந்தத்தாருவினைப் பிரத்தியேகமாய் விவரித்துப்பார்த்தா லதற்குப்பல்லக்கென்கிறபேருண்டோவென்று விசாரியும் அதுவுமல்லாமலிந்தகுடையிருக்கின்றதே அதுஅநேகமூங்கிற் பிளாச்சுக்களினாற் றுறுக்குமிடுக்குமாகப்போட்டுக்கட்டிக்குடையென்றுசொல்லப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

இந்தப்பிளாச்சுக்களைப் பிரத்தியேகமாயெடுத்துவிவகரித்துப் பார்த்தாலதுகுடையென்றெப்படிச் சொல்லப்படும்.

இப்படியேயஞ்சபூதங்களுடையப்பிரிவும் விசேஷத்தினுலின்சரீரமென்று மெய்சரீரமென்றும் விவகரிக்கப்படுகிறது

பூர்வகர்மசந்நியமான தேகங்களிற்பிரவேசித்த சீவனை ஸ்திரீயென்றும்புருஷனென்றும் யானையென்றும

குதிரையென்றும் பசுவென்றும் பட்சியென்றும் வின மாக்கப்படுகிறது

இருதுலௌகிக பார்வையினா லல்லாமற் பாரமாதிக மான பார்வையில்லை அந்தவறிவேஸ்வரூபமான ஆத்மா யட்சராட்சசாள் முதலானதேவமனுஷியபிராமணக்ஷத் திரியவைசிய சூத்திரஜாதிகளும் பசுமிருகபட்சியாதிக ளென்கிற நாமங்களும்ஆத்மாவுக்குக்கர்மசங்கியமேயல் லாமற் சுபாவமாயில்லை ஆனபடியினாலினிப்படிப்பட்ட வனென்றெப்படிச்சொல்லப்படும் ராசாவென்றும்சேவ கனென்றும்வன்னியனென்றும் விவகரிக்கப்படுகிறவஸ் துவெல்லாம் அசத்தென்றறியவேண்டும்.

எந்தவஸ்துவாகட்டுங்காலந்தரத்திற் பிறவியாய்ப்பே ரிடப்படுகின்றதோ அந்தவஸ்துவுக்குச்சத்தென்று சொ ல்லப்படாது நீயொருவனே தேசத்துக் கரசனென்றும் தகப்பனுக்குப் பிள்ளையென்றும் சத்துருவுக்குப் பகை யாளியென்றும் பெண்சாதிக்குப்புருஷனென்றுங்குமா ரனுக்குத்தகப்பனென்றுமிப்படிச்சொல்லப்படுகிறபோ து உன்னையாரென்றுநிச்சயிக்கலாம்ஓய்ராசாவேநீயாவ துதலையோவயிறோ கையோகாலோ இந்தவவயவங்களு க்குப் பிறம்பான சூட்சுமபுத்தியினா லுன்னை யாரென்று விசாரித்துப்பார் இப்படிதத்துவநிச்சயமாயிருக்கஇதர வித்தையினாலாத்மாவைஇப்படிப்பட்டதென்றெப்படிச்

சொல்லலாமென்று விஷ்ணுபுராணத்தில் விப்பிரோத்தமரான சடபாதர் சவ்வீரமகிபாலராஜாவுக்குபதேசம் பண்ணியிருக்கிறதும்சத்ததன்மாத்திரியைத் தவிர ஆகாசமில்லை சத்தபரிசதன்மாத்திரியைத்தவிரவாயுவில்லைசத்தபரிசயதன்மாத்திரியைத்தவிர அக்கினியில்லைசத்தபரிசரூபரசதன்மாத்திரியைத்தவிர அப்புவில்லைசத்தபரிசரூபகந்த தன்மாத்திரியைத்தவிரபிருதிவியில்லை என்றுத்தமா னாத்மவிவேகமென்கிறகிரந்தத்திற் சங்கராசாரியசுவாமிகள் நிருபித்திருக்கிறதும்பிரமாணமாம் இதுவேசித்தம்.

தூலப்பிரகரணம்-சம்பூரணம்

௨

நான்காவது.

சூட்சுமப் பிரகரணம்.

மூப்பிரகரணத்திற்பஞ்சீகிருத பஞ்சமஹாபூதங்களையுஞ்சமஷ்டிவியஷ்டி யாத்மகானசரீரங்களையும் இதன் மேற்கற்பிதமான ஆயாசங்களையுமுடைய தூலசரீரந்தானென்றெனநியதிபண்ணி இதற்குக்காரணமான சூட்சு

மசரீரமுந்தானல்லவென்றுநீக்குதற்பொருட்டு தன்ஸ்வ ரூபம்நிரூபிக்கிறார்

ஸ்லோகம்-

సచ్చిదానందస్వరూపే స్వస్మిన్నారోపితం వపుః సూ
క్ష్మం తస్యస్వరూపంచ. తావత్సంప్రతి నిరూప్యతే॥ ౧౧

(இதனதுபொருள்)

சச்சிதானந்தஸ்வரூபமான தன்னிடத்தி லாரோபிக்கப்பட்டது சூக்ஷ்மசரீரம் அதின்ஸ்வரூபம் நிரூபிக்கப்படுகின்றது,

அதுதெப்படியெனில் சத்த தன்மாத்திரை சாத்விகாரம்சஞ்சமஷ்டியிற்கூடினதுஞானம் சத்ததன்மாத்திரை ரசோம்சஞ்சமஷ்டியிற்கூடினது சமானவாயு- சத்ததன்மாத்திரைவியஷ்டிசாத்விகாம்சஞ்சுரோத்திரேந்திரியம் சத்ததன்மாத்திரைவிஷயம்-சத்ததன்மாத்திரை வியஷ்டிரசோம்சம் வாகிந்திரியம் இந்தஞானஞ் சமானவாயு சுரோத்திரேந்திரியஞ் சத்விஷயம வாகிந்திரியம் இந்தவைந்தையுஞ்சத்ததன்மாத்திரியைத்தவிரவில்லை பரிசதன்மாத்திரைசாத்விகாம்சஞ்சமஷ்டியிற்கூடினது மனதுபரிசதன்மாத்திரை ரசோம்சஞ்சமஷ்டியிற்கூடினது வியானவாயு பரிசதன்மாத்திரைவியஷ்டிசாத்விகாம்சந்தொக்கேந்திரியம் பரிசதன்மாத்திரைவிஷயம்பரிசதன்

மாத்திரை வியஷ்டி ரசோம்சம் பாணீந்திரியம் இந்தமன
தாவியானவாயு தொக்கேந்திரியம்பரிசவிஷயம் பாணீந்
திரியம இந்தவைந்தும பரிசதன்மாத்திரையைத் தவிர
வில்லை ரூபதன்மாத்திரைசாத்விகாம்சஞ்சமஷ்டியிற்கூ
டினது புத்திரூபதன்மாத்திரைரசோம்சஞ்சமஷ்டியிற்கூ
டினது உதானவாயுரூபதன்மாத்திரைவியஷ்டிசாத்விகா
ம்சஞ்சேத்திரேந்திரியம் ரூபதன்மாத்திரைவிஷயம் ரூப
தன்மாத்திரைவியஷ்டிரசோம்சம்பாதேந்திரியம் இந்த
ப்புத்தி உதானவாயுநேத்திரேந்திரியம் ரூபவிஷயம் பா
தேந்திரியமிந்தவைந்தும் ரூபதன்மாத்திரையைத்தவி
ரவில்லை ரசதன்மாத்திரை சாத்விகாம்சஞ் சமஷ்டியிற்
கூடினதுசித்தம்,

ரசதன்மாத்திரை ரசோம்சஞ் சமஷ்டியிற் கூடினது
அபானவாயு ரசதன்மாத்திரைவியஷ்டி ரசோம்சஞ்சிகு
வேந்திரியம் ரசதன்மாத்திரைவிஷயம்ரசதன்மாத்திரை
வியஷ்டிரசோம்சங்குய்யேந்திரியம் இந்தச்சித்தம் அபா
னவாயுசிகுவேந்திரியம் ரசவிஷயங்குய்யேந்திரியமஇந்
தவைந்தும்ரசதன்மாத்திரையைத்தவிரவில்லைகந்ததன்
மாத்திரைசாத்விகாம்சஞ் சமஷ்டியிற்கூடினது அகங்கா
ரம் கந்ததன்மாத்திரை ரசோம்சஞ்சமஷ்டியிற்கூடினது
பிராணவாயு-கந்ததன்மாத்திரை வியஷ்டிசாத்விகாமசங்
கிராணேந்திரியம் கந்ததன்மாத்திரைவிஷயம் கந்ததன்

மாத்திரைவியஷ்டி ரசோம்சங்குதேந்திரியம்இந்தவகங்காரம் பிராணவாயு கிராணேந்திரியம கந்தவிஷயம் குதேந்திரிய மிந்தவைந்துங்கந்ததன்மாத்திரையைத்தவிரவில்லை இந்தவாக்காதி கன்மேர்திரியகைளைந்தும் சத்தாதிவிஷயங்களைந்தும் சுரோத்திராதிஞானேந்திரியங்களைந்தும் பிரகஞ்திவாயுக்களைந்தும் ஞானம் நீங்கலாகாமனுதியந்தக் கரணங்க ளுன்குமாக விந்தவிருபதது நாலுங்கூடிச் சூட்சுமசரீர மாச்சு இதற்குச் சம்மதிவசனம்.

சுலோகம்.

పంచప్రాణమనోబుద్ధి దశేంద్రియసమన్వితం । అపం
చీకృతభూతోత్థం సూక్ష్మాంగం భోగసాధనం॥ ౨౩

(இதனதுபொருள்.)

பஞ்சப்பிராணனும் மனமும்புத்தியும் ஞானேந்திரியங்களுங் கன்மேந்திரியங்களுஞ் சூட்சும சரீரமென்றுபெயர்இப்படி ஆசாரியசுவாமிக ளாத்மபோத மென்கிறகிரந்தத்தினிருபிக்கிறோ மானபடியினுனிதுவே பிரமாணசித்தம்.

ஆனு லாசாரிய சுவாமிக ளாத்ம போதமென்கிற கிரந்தத்திற் சூட்சுமசரீரம் பதினேழு - தத்துவமென்று னிருபிந்திருக்க இருபத்நாலு தத்துவமென்

றெப்படிச்சொல்லப்படுமென்றால் மனதிற்சித்தத்தையும் புத்தியிலாங்காரத்தையுமடக்கிப் பஞ்ச விஷயங்களையுநீக்கிப் பதினேழாகக்கூறினார் யாமிந்தச்சித்தமகங்காரமிவைகளின்குணம்வெவ்வேறேயிருக்கின்ற படியினாலிவ்விரண்டையுஞ்சூட்சுமசரீரத்துக்குக்காரணமானபஞ்சதன்மாத்திரைகள் விஷயரூபமாகத் தோன்றுகிறபஞ்சதன்மாத்திரைகளைத் தவிரசூட்சுமசரீரமிராதானபடியினாலிந்தவிஷயங்களைந்தையுமாக வேண்டியுங்கூட்டிசூட்சுமசரீரமிருபத்துநாலென்றுசொன்னதுசித்தம்

இப்படியேதன்னிடத்திலத்தியஸ்தமாய்த் தோற்றுகிறபஞ்சதன்மாத்திரையினாலான விந்தச்சூட்சுமசரீரந்தானல்லவிந்தச்சூட்சுமசரீரத்தையறிந்தஞானமேதான் அதுவெப்படியென்னில் வாக்குப் பாணிபாதம் குய்யம் குதங்களென்கிறகன்மேந்திரியங்களுக்குவசனதானகமன-ஆனந்தவிசர்க்கமானவிஷயங்களுண்டாயிருந்தாலும் இந்தச்சுரோத்திரேந்திரியஞ் சத்தவிஷயத்தினால்வாகிந்திரியத்துக்கறிகிறதுதன்னாலறியப்பட்டவிந்தவாகிந்திரியந்தன்னையறியமாட்டாதாகையாற்சடம்இந்தவாகிந்திரியந்தானல்ல இவ்வாகிந்திரியஞ்சத்ததன்மாத்திரைவியஷ்டி சாத்விகாம்சத்தினாலானது இதன்ஹானிவிருத்திகளினால்வருகிறசுகதுக்கங்கடனக்கில்லை இந்தவாகி

ந்

திரியந்தானானால் இந்தவாகிந்திரியம்போனாற்றான்போக
வேண்டுமே இந்தவாகிந்திரியம் போனாலுந்தானப்படிப்
போகவில்லையே ஆகையாலிந்தவாகிந்திரியத்துக்குச்சா
ட்சியாயறிந்தசுரோத்திரேந்திரியமேதான் இப்படியேத
தொக்கேந்திரியம் பரிசவிஷயத்தினால் பாணீந்திரியத்து
க்குமிகிறது தன்னாலறியப்பட்ட விந்தப்பாணீந்திரியந்தன்
னையறியமாட்டாதாகையாற்சடம்.

இந்தப்பாணீந்திரியந்தானல்ல இந்தப்பாணீந்திரியம்
பரிசதன்மாத்திரைவியஷ்டிரசோம்சத்தினாலானது இந்
தப்பாணீந்திரியத்தினுடைய ஹானிவிருத்திகளினால்வ
ருகிறசுகதுக்கங்கட்கில்லை இந்தப் பாணீந்திரியமே
தானானா லிந்தப்பாணீந்திரியம்போனாற்றான் போகவே
ண்டுமே இந்தப்பாணீந்திரியம் போனாலுந்தான்போக
வில்லையே ஆகையினாலிப்பாணீந்திரியத்துக்குச்சாட்சி
யாயறிந்ததொக்கேந்திரியமேதான் இப்படியேநேத்திரே
ந்திரியம் ரூபதன்மாத்திரையினால் பாதேந்திரியத்துக்க
மிகிறது தன்னாலறியப்பட்ட பாதேந்திரியந்தன்னையறிய
மாட்டாதாகையாற்சடம்,

இந்தப்பாதேந்திரியந்தானல்ல இந்தப்பாதேந்திரியம்
ரூபதன்மாத்திரைவியஷ்டி ரசோம்சத்தினாலானது இந்
தப்பாதேந்திரியத்தினுடைய ஹானிவிருத்திகளினால்வ

ருகிற சுகதுக்கங்கூடனக்கில்லை இந்தப்பாதேந்திரியமே தானாலிந்தப்பாதேந்திரியம் போனாற்றான் போகவேண்டுமே இந்தப்பாதேந்திரியம் போனாலுந்தான் போகவில்லையேயானபடியினாலிந்தப் பாதேந்திரியத் துக்குச் சாட்சியாயறிந்தநேத்திரேந்திரியமேதான் இப்படியேசிகுவேந்திரியம் ரசவிஷயத்தினாற் குய்யேந்திரத்தையறிகிறது தன்னாலறியப்பட்ட குய்யேந்திரியந் தன்னையறியமாட்டாததாகையாற் சடம்.

இந்தக்குய்யேந்திரியந்தானல்ல இந்தக்குய்யேந்திரியம்ரசதன்மாத்திரை வியஷ்டிரசோமசத்தினாலானது இந்தக்குய்யேந்திரியத்தினுடைய ஹானி விருத்திகளினால் வருகிறசுகதுக்கங்கூடனக்கில்லை இந்தக்குய்யேந்திரியமே தானாலிந்தக்குய்யேந்திரியம்போனாற்றான் போகவேண்டுமே இந்தக்குய்யேந்திரியம் போனாலுந்தான்போகவில்லையே ஆனபடியினாலிக்குய்யேந்திரியத்துக்குச்சாட்சியாயறிந்த சிகுவேந்திரியமேதான் இப்படியே கிராணேந்திரியங் கந்ததன் மாத்திரையினாற் குதேந்திரியத்தையறிகிறது தன்னாலறியப்பட்ட குதேந்திரியந்தன்னையறியமாட்டாததாகையாற சடம்-

இந்தக்குதேந்திரியந்தானல்ல இந்தக் குதேந்திரியங்கந்ததன்மாத்திரைவியஷ்டிரசோமசத்தினாலானது இந்தக்குதேந்திரியத்தினுடைய ஹானிவிருத்திகளினால்வருகிற சுகதுக்கங்கூடனக்கில்லை இந்தக்குதேந்திரியமேதானால்

விந்தக்குதேந்திரியம் போனாற்றான் போகவேண்டுமே
இந்தக்குதேந்திரியம் போனாலுந்தான் போகவில்லையே
ஆனபடியினாலிந்தக்குதேந்திரியத்துக்குச் சாட்சியாயறி
ந்தகிராணேந்திரியமேதான் இந்தச்சுரோத்திரந்தொக்
கு சட்சு சிகுவாகிராணமென்கிற ஞானேந். திரியங்கள்
சத்த-பரிச-ரூப-ரச-கந்ததன்மாத்திரைகளினால்-வாக்கு
பாணி-பாதம்-குய்யம்ருத்க்களென்கிற கன்மேந்திரியங்
களை யறிகிறதுதன்னாலறியப்பட்ட கன்மேந்திரியங்கள்
தானல்லஇந்தக்கன்மேந்திரியங்கள் பஞ்சதன்மாத்திரை
வியஷ்டிரசோம்சத்தினாலானதுஆனபடியாலிந்தக்கன்மே
ந்திரியங்களுடைய் ஹானிவிருத்திகளினால்வருகிற சுக
துக்கங்கடலகையில்லை ஆந்தக்கன்மேந்திரியங்களேதானா
னாலிந்தக்கன்மேந்திரியங்களபோனாற்றான்போகவேண்
டுமே இந்தக்கன்மேந்திரியங்கள்போனாலுந்தான் போக
வில்லையே ஆனபடியினாலிந்தக்கன்மேந்திரியங்களுக்கு
ச்சாட்சியாயறிந்தஞானேந்திரியங்களேதான் இப்படியே
சுரோத்திரம தொக்குசட்சுசிகுவாகிராணங்களென்கிற
ஞானேந்திரியங்களுக்குச்சத்தபரிசரூபரசகந்த தன்மா
த்திரைகளென்கிறவிஷயங்களுண்டாயிருந்தாலும் அக
ங்காரம்பிராண வாயுவோடேகூடிக் கிராணேந்திரியத்
தைப்பற்றிக்கந்தமறிகிறது இப்பிராணவாயு கிராணே

ரத்திரியம்சப்ததன்மாத்திரை இந்தமூன்றையுமறிந்தவக
ங்காரமேதான்தன்னாலறியப்பட்டவிந்தமூன்றுந்தன்னை
யறியமாட்டாதாகையாற் சடம்.

இந்தமூன்றுந்தானல்ல இந்தமூன்றுஞ்சமஷ்டிரசோ
ம்பசத்தினாலும் வியஷ்டிசாத்விகாம்சத்தி னாலுமானது
இம்மூன்றினுடையஹானிவிர்த்திகளினால் வருகிற சுக
துக்கங்கடனக்கில்லை இந்தமூன்றுந்தானானாலிந்தமூன்று
ம் போனாற்றான்போகவேண்டுமே இந்தமூன்றும்போ
னாலுந்தான்போகவில்லையே ஆகையாலிந்த மூன்றுக்கு
ஞ்சாட்சியாயறிந்த அகங்காரமேதான் இப்படியேசித்த
ம் அபானவாயுவோடேகூடி சிகுவேந்திரியத்தைப் பற்
றிரசத்தையறிகிறது ஆகையாலிந்தஅபானவாயுவு சிகு
வேந்திரியம் ரசதன்மாத்திரை இம்மூன்றையு மறிந்தசி
த்தமேதான்தன்னாலறியப்பட்ட விந்தமூன்றுந்தன்னைய
றியமாட்டாதாகையாற் சடம்.

இந்தமூன்றுந்தானல்ல இந்தமூன்றும்ரசோம்சஸமஷ்
டியினாலும் சாத்விகாம்ச வியஷ்டியினாலுமாயின ஆ
கையாலிந்தமூன்றினுடைய ஹானிவிருத்திகளினால்வ
ருகிற சுகதுக்கங்கடனக்கில்லை இந்தமூன்றுமேதானானா
லிந்தமூன்றும்போனாற்றான்போகவேண்டுமே இந்தமூ
ன்றும்போனாலுந்தான் போகவில்லையே ஆகையாலிந்த
மூன்றுக்குஞ்சாட்சியாயறிந்த சித்தமேதான் இப்படியே

புத்திஉதானவாயுவோடேகூடி சேத்திரேந்திரியத்தைப்பற்றிரூபத்தையறிகிறது இந்தவுதானவாயு சேத்திரேந்திரியம்ரூபதன்மாத்திரை இந்தமூன்றையுமறிந்தபுத்தியேதான் தன்னாலறியப்பட்ட இந்தமூன்றுந்தன்னையறியமாட்டாததாகையாற் சடம்.

இந்தமூன்றுந்தானல்ல இந்தமூன்றும்சமஷ்டி ரசோம்சத்தினாலும் வியஷ்டிசாத் விகாம்சத்தினாலுமானது ஆகையாலிந்தமூன்றினுடையஹாரிவிருத்திகளினால்வருகிறசுகதுக்கங்களெனக்கில்லை இந்தமூன்றுமே தானானாலிந்தமூன்றும்போனாற்றான்போகவேண்டுமே இந்தமூன்றும் போனாலுந்தான்போகவில்லையேஆனபடியினாலிந்தமூன்றுக்குஞ்சாட்சியாயறிந்த புத்தியேதான்.

இப்படியேமனது வியானவாயுடனேகூடித்தொக்கேந்திரியத்தைப் பற்றிபரிசத்தையறிகிறது ஆகையாலிந்த வியானவாயுதொக்கேந்திரியம் பரிசவிஷயம் இந்தமூன்றையுமறிந்தமனதேதான் தன்னாலறியப்பட்ட இந்தமூன்றுந்தன்னையறியமாட்டாததாகையாற்சடம்,

இந்தமூன்றுந்தானல்ல இந்தமூன்றும் பரிசதன்மாத்திரை சமஷ்டிரசோம்சத்தினாலும் வியஷ்டி சாத்விகாம்சத்தினாலுமானது ஆகையாலிந்தமூன்றினுடையஹானிவிருத்திகளினால வருகிறசுகதுக்கங்களெனக்கில்லை இந்த

மூன்றுமேதானானலிந்தமூன்றும் போனாற்றான் போக வேண்டுமே இந்தமூன்றும்போனாற்றான் போகவில்லையே ஆகையாலிந்தமூன்றுக்குஞ் சாட்சியாயறிந்த மனமேதான்,

இப்படியேஞானமும் சமானவாயுவுடனே கூடிசுரோத்திரேந்திரியத்தைப்பற்றி சத்தத்தையறிகிறது ஆகையாலிந்தச்சமானவாயுசுரோத்திரேந்திரியஞ்சத்தவிஷயம் இந்தமூன்றையுமறிந்தஞானமேதான் தன்னாலறியப்பட்டவிந்தமூன்றாலதன்னையறியமாட்டாதாகையாற் சடம்.

இந்தமூன்றுந்தானல்ல இந்தமூலஞ்சத்தன்மாத்திரைசமஷ்டிசோமசத்தினாலும் வியஷ்டிசாத்விகம்சத்தினாலுமானது ஆகையால் இந்தமூன்றினுடையமானிவிருத்திகளினால்வருகிறசுகதுக்கங்கடனக்கில்லை இந்தமூன்றுமேதானானவிந்தமூன்றும்போனாற்றான் போகவேண்டுமே இந்தமூன்றும்போனாலுந்தான் போகவில்லையே ஆனபடியினாலிந்த மூன்றுக்குஞ் சாட்சியாயறிந்தஞானமேதான் இந்தப்பிராணாதிவாயுக்களைந்துஞ்சுரோத்திராதிஞானேந்திரியங்களைந்து சத்தாதிவிஷயங்களைந்து ஆகப்பதினைந்தையுமறிந்தஞானம்மனதுபுத்திபுத்திசித்தம்அகங்காரங்களென்கிற அந்தக்கரணங்களைத்தன் தன்னாலறியப்பட்ட விந்தப்பதினைந்தாற் தன்னையறியமாட்டாதாகையாற்சடம்.

இந்தப்பதினைந்துந்தானல்ல இந்தப்பதினைந்தும் பஞ்சதன்மாத்திரை சமஷ்டி ரசோம்சத்தினாலும் வியஷ்டி சாத்விகாம்சத்தினாலுமானது ஆகையாலிந்தப் பதினைந்தினுடைய ஹானிவிருத்திகளினால் வருகிறசுகதுக்கங் கடனக்கில்லை இந்தப்பதினைந்துந்தானானா லிந்தப்பதினைந்தும் போனாற்றான்போகவேணுமே இந்தப் பதினைந்தும் போனாலுந்தான்போகவில்லையே ஆகையாலிந்தப்பதினைந்துக்குஞ்சாட்சியாயறிந்தக் கரணங்களேதான்-

இப்படியேமனதென்றறிந்த ஞானமேதான் தன்னாலறியப்பட்டமனது தன்னையறியமாட்டாதாகையாற்சடம்,

இந்தமனதுதானல்ல இந்தமனதுபரிசதன்மாத்திரை சமஷ்டிசாத்விகாம்சத்தினாலானது இந்தமனதினுடைய ஹானிவிருத்திகளினால் வருகிறசுகதுக்கங்கடனக்கில்லை இந்தமனதேதானானாலிந்த மனதுபோனாற்றான் போகவேண்டுமே இந்தமனதுபோனாலுந்தான் போகவில்லையே ஆகையாலிந்தமனதுக்குச் சாட்சியாயறிந்த ஞானமேதான்-

இப்படியேபுத்தியென்றறிந்த ஞானமேதான் தன்னாலறியப்பட்டபுத்திதன்னையறியமாட்டாதாகையாற்சடம்

இந்தபுத்தி தானல்ல இந்தபுத்தி ரூபதன்மாத்திரைசமஷ்டி சாத்விகாம்சத்தினாலாவது ஆகையாலி

ந்தப்புத்திகளினுடைய ஹானிவிருத்திகளினால்வருகிற
சுகதுக்கங்களெனக்கில்லை இந்தப்புத்தியே தானானாலிந்த
ப்புத்திபோனாற்றான் போகவேண்டுமே - இந்தப்புத்தி
போனாலுந்தான் போகவில்லையே-ஆகையா லிந்தப்புத்
திக்குச்சாட்சியாயறிந்த ஞானமேதான்,

இப்படியேசித்தமென்றறிந்த ஞானமேதான்தன்னால
றியப்பட்டசித்தந்தன்னையறியமாட்டாததாகையாற்சடம்.

இந்தச்சித்தந்தானல்ல-இந்தசித்தம்ரசதன்மாத்திரை
சமஷ்டி சாத்விகாம்சத்தினாலானது ஆகையாலிந்தச் சி
த்தத்தினுடைய ஹானிவிருத்திகளினால் வருகிற சுகது
க்கங்களெனக்கில்லை இந்தசித்தமே தானானா லிந்தச்சித்த
ம்போனாற்றான்போகவேண்டுமே இந்தசித்தம் போனாலு
ந்தான்போகவில்லையே ஆகையா லிந்தச்சித்தத்துக்குச்
சாட்சியாயறிந்தஞானமே தான் - இப்படியே அகங்கார
மென்றறிந்த ஞானமேதான் தன்னாலறியப்பட்ட அகங்
காரந் தன்னையறிய மாட்டாததாகையாற் சடம்.

இந்த அகங்காரந்தானல்ல-இந்தவகங்காரங் கந்ததன்
மாத்திரை சமஷ்டிசாத்விகாம்சத்தினாலானது-ஆகையா
லிந்தவகங்காரத்தினுடைய ஹானி விருத்திகளினால் வ
ருகிறசுகதுக்கங்களெனக்கில்லை-இந்த வகங்காரமே தானா
னாலிந்த வகங்காரம் போனாற்றான்போகவேண்டுமே இ
ந்தவகங்காரம் போனாலுந்தான்போகவில்லையே-ஆனப
டியினா லிந்த வகங்காரத்துக்குச் சாட்சியாயறிந்த ஞான
மேதான்,

இத்தன்மைப் புத்தி- சித்தம்-அகங்காரங்களென்கிற-ரூபம்-நிச்சய சாஞ்சல்ய- அபிமானங்களையறிந்த ஞானமேதான்-தன்னாலறியப்பட்ட விஷயங்களை யறியமாட்டாததாகையால் ஜடம் இந்நாலுந்தானல்ல- இந்நாலும்-பரிச-ரூப-ரச-கந்த தன்மாத்திரைகளினுடைய சமஷ்டிசத்வகாரியசத்தினாலானது இந்நாலினுடைய ஹானிவிருத்திகளினால்வருகிற சுகதுக்கங்களுனக்கில்லை- இந்நாலுமே தானானாலிருந்தாலும் போனாற்போல் போகவேண்டுமே-இந்நாலும் போனாலுந்தான் போகவில்லையோ ஆகையால் இந்நாலுக்குஞ் சாட்சியாயறிந்த ஞானமேதான்வசன-தானகமன ஆநந்த-விசர்க்கமிவைகளைப் பண்ணுகிற கிரியாசத்தியான கன்மேந்திரியங்களுக்கும் சப்தாதிவிஷயங்களுக்கும்-இந்தவிஷயங்களைக் கிரியாசத்தியான ஞானேந்திரியங்களுக்கும் உசுவாச ரூபமான பிராணவாயுவும் நிசுவாசரூபமான அபானவாயுவும் மூங்கப்படுகிறதுந் தும்முகிறது மிருமுகிறதுங்கண்திறக்கிறது மூடுகிறதுமான வுதானவாயுவும்- புசித்தவன்னத்தை ஜீரிப்பிக்கப்பண்ணுகிற வியானவாயுவும் புசித்தபதார்த்தத்தைச் சமானமாகப்பண்ணுகிற சமானவாயுவுமிப்படிப்பட்ட கிரியாசத்தியான் பிராணாதிவாயுக்களுக்கும்-இவைகளையெல்லாமறிகிற வாதக்கரணங்களுக்கு

மாகவிருபத்துநாலுந் தன்னையறியமாட்டா தாகையாலு
மேபோட்டுத் தங்களைத்தாங்க ளறிவார்களோ அதுவுமி
ல்லாதபடியினாலும் ஒருத்தரையொருத்தரறிவார்களோ
அதுவுமில்லாதபடியினாலுங் கிராகசத்திக் கிரியாசத்திக
ளாயிருக்கிறபடியினாலுஞ் சடங்களானபடியினாலும் இந்
தவிருபத்துநாலுதத்துவங்களுந்தானல்ல இந்தவிருப
த்துநாலு தத்துவங்களும் பஞ்ச தன்மாத்திரையினு
டையசமஷ்டி வியஷ்டி ராசசசாத்விகாம்சத்திலான
துஇந்த விருபத்துநாலு தத்துவங்களினுடைய ஞா
னிவிருத்தியினால்வருகிற சுகதுக்கங்கடனக்கில்லை இந்
தவிருபத்துநாலு தத்துவமுந் தானல்ல விந்தவிருபத்
துநாலுதத்துவமும் போனாற்றான் போகவேண்டுமே
இந்தவிருபத்துநாலுதத்துவம் போனாலுந்தான் போ
கவில்லையே யெப்படியும் போகவில்லையென்றறிந்தாயி
னிந்த விருபத்துநாலுமில்லாமற் போனாலுந்தான்ஞா
னாத்மகமாயிருந்துகொண்டிருப்பவும் விருத்தியர்த்து
விழித்தவுடன் இந்தவிருபத்துநாலு தத்துவமில்லாம
ற்சுழுத்தியிலிருக்கவென்று தானிருக்கவனுபவஞ்சொல்
லுகிறபடியினாலும் இந்த விருபத்துநாலுதத்து
வமுந்தானல்ல இந்தவிருபத்துநாலு தத்துவங்களும்
க்ஷேத்திர மிந்தவிருபத்துநாலு தத்துவங்களையுமறிந்

தஞானமே க்ஷேத்திரஞன்-இந்தவிருபத்துநான்கு தத்துவங்களும் அநாத்மா இந்தவிருபத்துநான்கு தத்துவங்களையறிந்தவறிவே ஆத்மா-இந்தவிருபத்துநான்குதத்துவங்களையு மறிந்தவறிவே புருஷன்-இதற்குச்சம்மதிவசனம்.

சுலோகம்.

రూపం దృశ్యం లోచనం దృక్ తద్దృశ్యం దృక్తు మానసం।
దృశ్యా ధీవృత్తయస్సాక్షీ దృగేవసతుదృశ్యతే॥ ౨౩

இதனதுபொருள்.

ரூபந்திரிஸ்யம்-கண்திருக்கு-அக்கண்திரிஸ்யம்மனந்திருக்கு-அம்மனந்திரிஸ்யம்- ஆத்மந்திருக்கு அவ்வாத்மா திரிஸ்யமாககாட்டாது.

என்றுவித்தியாரண்யசுவாமிகள் திருக்குத்திரிஸ்யவிவேகமென்கிறபடியினாலும்-சுருதிகளிற் சொல்லியிருக்கிறபடியினாலும்-இதுவேபிரமாணசித்தம்.

இந்தக்ஷேத்திரஞ்ஞனை தானே சமஷ்டிசூட்சுமசரீரங்களிலும் இவைகளுக்குக்காரணமான அபஞ்சீகிருதமான பஞ்சதன்மாத்திரைகளிலும் அநுசூதமாயிருந்துகொண்டு சாட்சியாயறிகிறானைபடியினாலும்-இந்தச்சமஷ்டி வியஷ்டியான சூட்சுமசரீரங்களும்-இவைகளு

க்குக்காரணமான அபஞ்சீகிருத பஞ்சதன்மாத்திரைக
ளுந்தானல்ல-தனக்கெதிராய்த்தோற்றுகிற விந்தச்சமஷ்
டிவியஷ்டியான சூட்சும சரீரங்களிடத்தில் மிவைகட்
குக்காரணமான பஞ்சதன்மாத்திரைகளிடத்திலும் அத்
தியஸ்தமாய்த்தோற்றுகிறனைத் தைசதனென்றுஞ்சொ
ர்ப்பனகற்பிதனென்றும் பிராதிபாதிகனென்றும் - இர
ணியகர்ப்பனென்றும-மஹாப்பிராணனென்றுஞ்சூத்தி
ராத்மாவென்றும்-அபிமானத்துவமும் சொர்ப்பனவத்
தையுங்கண்டஸ்தானமும் - சுயேச்சாபோகமும-உகார
மாத்திரையும்-சாத்விககுணமும்-இச்சாசத்தியும்-விஷ்
ணுமூர்த்தியும்-பிராமயகோசமும் மனோமயகோசமும்
விஞ்ஞானமயகோசமும்-நான் வார்த்தைசொல்லுகிறவ
ன்-நான்தாதா-நான்நடக்கிறவன்-நான்சகல விசர்ச்சனம்
பண்ணுகிறவன்-நான்உலோமயன்-நான்நொண்டி-நான்மூ
டவன்-நான்பத்தகோஷ்டன்-நான்பண்டகனென்கிற கன்
மேந்திரியங்களுடையகிரியாவத்தியாசங்களும்-நான்கே
ட்கிறவன்-நான்பரிசிக்கிறவன்-நான்பார்க்கிறவன்- ருசிய
றிகிறவன்-நான்வாசனையறிகிறவன்-நான்செவிடன்- நான்
மரத்தபபோயிருக்கிறவன்-நான்குருடன்-நான் ருசியறி
யாதவன்-நான் மூக்கிறையனென்கிற ஞானேந்திரியங்க
ளுடையகிராகாத்தியாசங்களும்-நான்சீவிக்கிறவன்நான்

சஞ்சரிக்கிறவன்-நான் சத்தியுடையவன் நான் வீரியமு
டையவன்-நான்ப்பிரித்துவியினென்றும்-நான் தாகிச்சலினென்
றும்-நான் வாயுவேகமினென்றும்- நான் பலமுடையவ
னென்றும்-நான் அம்பணியாணவித்தவை-நான் அடமேயாகி
நான்மெய்யோகியென்றும்-நான் கஸ்திரத்தாழும்பகிறவன்
நானிருமுகிறவன்-நான் தும்முகிறவன்-நான் கொட்டாவி
டுகிறவன்-நான் விழுங்குகிறவனென்றும் நான்-ஏலங்கிப
ன்னுகிறவன்-நான் சிரசம்பண்ணிக்கொள்ளுகிறவன்
நான் ஏப்பமிடுகிறவனென்றும்-இவைமுதலிய பந்து
சப்பிரகரணங்களுடைய கிரியாத்தியாசங்களும்-நான்-சவ்
கற்பவர்த்தன்-நான் மனோவேகி-நான்யோகி-நான் மந்திர
யோகி-நான் சேவகி-நான்ராகி-நான்சோகி-நான் தவேஷி
நான்காமி-நான் சமுகயமுள்ளவனென்றும்-நான் புத்தி
கெந்தன்-நான் விவேகி-நான் மகாபுத்தியுள்ளவன்-நான்னே
கசத்துக்கிரகி-நான்கர்த்தா-நானிச்சயவந்தன்-நான் விரு
த்தன்-நான்பண்டிதன்-நான் வேதாந்தகாமியென்றும்
நான்-சஞ்சலன்-நான்சபலன்-நான் சிந்தகனென்றும்-நா
னகங்காரி-நானுக்கிரன்-நான் வீரன் நான்சூரன்-நானபி
மானியென்கிற-இவைமுதலான வுத்தக்கரணங்களுடை
யகிராகாத்தியாசங்களும்-உதாத்தம்-அநுதாத்தம்- ஸ்வ
ரிதங்களென்கிற வேதசுரங்களும்-சர்ருசுரங்களும் ரத

இதங்களும்-பேரீ-மிருதங்க-சங்க-பணவ-கோமுகாதிவா
த்தியங்களும்-சதுர்விதபேதசத்தங்களும்-விலாப-பிரலா
ப-துர்லாப-சபருஷாலாப-அடிவிலாப-சோகாதிதக்
கசத்தங்களும்-அஷ்டாதச பாஷைகளும்-இவைமுதல
ன சத்தங்களுடைய வத்தியாசங்களும்-சீத-உஷ்ண-மி
ருது-கடின-தாரதம்மியாதி பரிசத்தினுடைய வத்தியாச
ங்களும்-நீல-பீத-சுவேத-ரத்த-அரிசன முதலான தாரத
ம்மியாதி ரூபத்தினுடைய வத்தியாசங்களும்-உப்பு-பு
ளிப்பு-கைப்பு-தித்திப்பு-துவர்ப்பு-முதலான ரசதாரதம்
மியமான ருசியினுடைய வத்தியாசங்களும்-சுகந்த-துர்
க்கந்த-மிஸ்ரகந்த-தாரதம்மியாதி வாசனைகளினுடைய
வத்தியாசங்களும்-இந்தசூட்சுமப் பிரபஞ்சத்தைக் குறி
த்துசொல்லப்பட்ட தத்துவசாஸ்திர தர்க்கசாஸ்திரமீமா
ம்சசாத்திரங்களும் சமஷ்டி வியஷ்டியினுண்டானதா அநே
கவத்தியாசங்களும் இவைமுதலான விசித்ர சூட்சுமப்பி
ரபஞ்சத்தின் பேரிற்றோற்றுகிற சகலவத்தியாசங்களும்
இதற்காதாரமான சூட்சுமப் பிரபஞ்சமும் சசவிஷாண
வந்தியாபுத்ர ககனாரவிந்தமித்தியாபுருஷன்போலவே
காலத்திரயத்திலுந் தன்னிடத்தில்லை-இந்தவிருபத்து
நான்கு தத்துவங்களைக்குறித்துச் சூட்சும சரீரமென்று
சொல்லுவோமென்றால்-இந்த விருபத்துநான்கு தத்து

வங்களும் வித்திருபமாய் வெவ்வேறு நாமங்களிருக்கிற படியினாலும் ஞானம் சமானவாயு-சுரோத்திரேந்திரியம் வாகிந்திரியம்-இந்தநான்குவிருத்தியும் சத்ததன்மாத்திரையைத் தவிரவில்லாதபடியினாலும்-மனது-வியானவாயு-தொக்கேந்திரியம்-பாணிந்திரியம்-இந்தநான்குவிருத்தியும் பரிசதன்மாத்திரையைத் தவிரவில்லாதபடியினாலும் சித்தம்-ஆபானவாயு-சிகுவேந்திரியம்-குய்யேந்திரியம்இந்தநான்குவிருத்தியும் ரசதன்மாத்திரையைத்தவிரவில்லாதபடியினாலும்-அகங்காரம்- பிராணவாயு-கிராணேந்திரியம்-குதேந்திரியம்-இந்த நான்குவிருத்தியுங்கந்ததன்மாத்திரையைத் தவிரவில்லாதபடியினாலும் அகங்காரம்-பிராணவாயு-கிராணேந்திரியம்- குதேந்திரியம் இந்நான்குவிருத்தியுங் கந்ததன்மாத்திரையைத்தவிரவில்லாதபடியினாலும் இந்த பஞ்சதன்மாத்திரைகளைப் பிரத்தியேகமாய் விவகரித்துப் பார்க்குமிடத்தில் அகங்காரத்துவமென்கிற அவஸ்தையிலத்தியஸ்தமாய்த்தனிடத்தி லெதிராய்த்தோற்றுகிற அபஞ்சீகிருதமானபஞ்சதன்மாத்திரைகளும் இவைகளுக்குக் காரியமானசூட்சுமப் பிரபஞ்சமும - இதனிடத்தி லத்தியஸ்தமாய்த்தோற்றுகிறநாமங்களும்-இதைக்குறித்து வந்த வாபாசங்களுஞ்-சவிஷர்ணவந்தியாபுத்திர சகஞரவித்தாமித்தியா புருஷன்போலவே கால்த்திரயத்திலுந் தனக்கில்லை இதற்குச் சம்மதிவசனம்.

சுலோகம்.

పంచభూతమయంవిశ్వంమరీచిజలసన్నిభం।కస్యాహో
భూన్నమస్కారఃయోహమేకోనిరంతరః॥ ౨౪

(இதனது பொருள்.)

பஞ்சபூத ஸ்வரூபமான பிரபஞ்சங் கானந்சலத்துக்கொப்பானது நானேயெங்கும்பரிபூரணமாயிருக்கிறேன் ஆருக்குநமஸ்காரம்என்றும்.

சுலோகம்

మనోనబుద్ధిర్నశరీరమింద్రియం తన్మాత్రభూతానిన
భూతపంచకం।అహంకృతిశ్చాపి చిచీత్స్వరూపం తమీశ
మూతాం సముపేతిశాంతతేమ్॥ ౨౫

(இதனதுபொருள்)

சித்ஸ்வரூபமாயும் சர்வேஸ்வரனையும் சாஸ்வதமாயுமிருக்கின்ற ஆத்மஸ்வரூபத்தைமனதும் புத்தியும் அகங்காரமும் பஞ்சதன்மாத்திரையும் பஞ்சமகா பூதங்களும் சரீரமும் அடையமாட்டாது,

என்றும்அவதூதகீதைமுதலிய சாஸ்திரங்களில்தத்தாத்திரய யோகீஸ்வரமுதல்ய பெரியோர்கள்சொல்லியிருக்கிறபடியாலிதுவே பிரயாணசித்தம்

சூட்சுமப்பிரகரணம சம்பூர்ணம்

ஐந்தாவது.

காரணப் பிரகரணம்.

முற்பிரகரணத்திற் சங்கற்பரூபமான சூட்சுமசரீரத்தையும் அதற்காதாரமான பஞ்சதன்மாத்திரைகளையும் நியதிகளாந்தவைகட்காதாரமான அவித்தையை நியதிகளாதற்பொருட்ட தன்மயமான காரணசரீரஸ்வரூபநிரூபிக்கிறார்.

சுலோகம்.

సచ్చిదానందస్వరూపేస్వాత్మ్యారోపితంవపుః । కా
రణం తత్స్వరూప తు తావ త్తత్రనిరూప్యతే॥ ౨౬

(இதனதுபொருள்)

சச்சிதானந்தஸ்மரூபமான தன்னிடத்திலாரோபிக்கப்பட்டது காரணசரீரம் அதினுடைய ஸ்வரூபமானது நிரூபிக்கப்படுகிறது.

காரணசரீரமாவது பஞ்சதன்மாத்திரைகள் பிரத்தியேகம்பிரத்தியேகமாய் விபகரித்துப் பார்க்குமிடத்திற் சசவிஷண வந்தியாபுத்திர ககனாரவிந்தமித்தியா புருஷன்போலவே வொன்றுமில்லாமற் போனபடியினாலிதுவொன்றுமில்லையென்றுதோற்றப்பட்டதே காரண

சரீரம் இத்தக்காரணசரீத்திரத்துக்கு அகங்காரதத்து
வமென்றும் அவித்தையென்றும் தமமென்றும் தூலசூ
ட்சுமசரீரங்களுக்குக்காரணமென்றும்ஒன்றுந்தெரியவி
ல்லைஎன்றும் ஒன்றுங்காண விலலையென்றும் ஒன்றுந்
தோணவில்லையென்றும் பிராக்ஞனென்று மிவைமுதலா
னபரியாயநாமங்களையுடைய வித்துவேகாரணசரீரம் இ
தற்குச்சம்மதிவசனம்

சுலோகம்

అనాద్యనిర్వాచ్యతయా కారణోపాధిరుచ్యతే। ఉపా
ధిత్రితయాదన్యమాత్మానమవధారయేత్॥ ౧౭

(இதனது பொருள்,)

அநாதியாகியும் அநிர்வாச்சியமாகியு மிருக்கின்றபடி
யாற் காரணோபாதியென்று சொல்லப்பட்டதுஇம்மூன்
றுபாதிகளுக்கும் அன்னியமாயாத்மாவை யறியவேண்
டியது.

என்று ஆச்சரியசுவாமிக ளாத்மபோதமெங்கிறகிர
ந்தத்திணிருபித்திருக்கிறா ரானபடியினாலிதுவேபிரமா
ணசித்தம்

தன்னிடத்தி லத்தியஸ்தமாய்த் தோற்றுகிற விந்தக்
காரணசரீரந்தானல்ல அதெப்ப டித்தானல்லவென்றா
ஒன்றுமில்லையென்றால் ஒன்றுமில்லையென்று தோற்ற

ப்பட்ட விந்தக்காரணசரீரத்துக் கொன்றுமில்லை யென்
றறிந்த ஞானமேதான் தன்னாலறியப்பட்ட விந்தக்காரண
சரீரந்தன்னையறியமாட்டாததாகையாற் சடம் இந்தக்கார
ணசரீரந்தானல்ல இந்தக்காரணசரீர மகதத்துவத்தினு
ளானது அந்தக்காரணசரீரத்தினுடையஞானநிவிருத்தி
களினால்வருகிற சுகதுக்கங்களுக்கில்லை இந்தக்காரண
சரீரமேதானாலிந்தக்காரணசரீரம் போனாற்றான் போ
கவேண்டுமே இந்தக்காரணசரீரம்போனாலுந்தான்போ
கவில்லையே அதெப்படிபோகவில்லையென்றாற்சமாதிய
வஸ்தையிற்காரணசரீரம்போனாலுந்திரும்பவும் விருத்
தியுத்தபின்பு சுகமேயிருந்ததேயென்று சொல்லுகிறானே
னபடியினாலிந்தக்காரணசரீரந்தானல்ல இந்தக்காரணச
ரீரத்துச்சாட்சியாயறிகிற ஞானமேதான்-

ரீரத்-
ரணசரீரத்துக்குச் சாட்சியாயறிகிறதானே
இந்தக்க... சரீரங்களிலேயும் அநுசூதமாயிருந்த
சமஷ்டி காரண... தன்னாலறியப்பட்ட விந்தச்சமஷ்
டிகிற ஞானமேதா... அறியமாட்டாததாகையாற் சடம்.
டி காரணசரீரந்தன்னை ...
ரீரந்தானல்ல இப்படித்தன
இந்தச்சமஷ்டி காரணச...
க்கெதிராயத்தோற்றுகிறசமஷ்டி வியஷ்டியான காரண
சரீரத்தின்பேரிலத்தியஸ்தமாய்த்தோற்றுகிற பிராஞ்
ஞன் பாரமார்த்திகன் அவச்சின்னன் அவ்வியாகிருத

னென்கிற அபிமானித்துவமும்சுழுத்தி யவஸ்தையுமாந
ந்தமயகோசமும் தாமசகுணமும் ஆத்மானந்தபோக
மும் ஞானசத்தியும் ருத்திர மூர்த்தியும் இருதயஸ்தா
னமும மகாரமாத்திரையும் நான்குபோந்துரு நானசங்
துஷ்டன நான்சாத்விகன் நான்ராசதன் நான்றாமசன்
நான்சடன் நானனுர்தன் நான்ஞானி நான்மூடன் நா
ன்சந்தன் நான்சண்டன் நான்மோகி நான்விவேகி நான்
நுராகதன் நான்பாபிஷ்டன் நான்சோம்பன்நானென்று
க்குமாகாதவன் நானெறிந்துபோட்டவன் நான்கெட்டுப்
போனவன் நான்வெறியன் நான்கையாலாகாதவனென்
கிறபிராத்திசங்கியாத்தியா சத்துவமும் இந்தக்காரணச
ரீரத்தைக்குறித்துச்சொலலப்பட்டசத்தசாஸ்திரம்யோ
கசாஸ்திரம் வேதாந்தசாஸ்திரமுதலிய சாஸ்திரங்களு
ம் சமஷ்டிவிபஷ்டி யென்கிற வத்தியாசங்களும் இவை
முதலான விந்தக்காரண பிரபஞ்சத்தின் பேரிற் றோற்
றுகிற சகலவத்தியாசங்களுஞ் சசவிதாரணமந்தியா புத்
தியர ககனூரவிந்தமித்தியாபுருஷன்போலவேசகலத்தி
ரயத்திலுந்தனக்கில்லை அதெப்படிதனக்கில்லையென்று
லதற்குத்திருஷ்டாந்தபூர்வகமாகச்சொல்லுகிறோம்.

அதென்னவென்றால் கடத்தைக்குறித்தவாதகடாபா
வங்கடத்தைத்தவிர வெப்படியில்லையோ வப்படியேபி

ரபஞ்சத்தைக்குறித்து வந்தபிரபஞ்சபாவம்பிரபஞ்சத்தைத்தவிர வில்லையானபடியினால் மகத்துவத்தின்பேரிலத்தியஸ்தமாய்த்தோற்றுகிற விந்தக்காரணப் பிரபஞ்சமும் இதனிடத்திலத்தியஸ்தமாய்த் தோற்றுகிறபிராந்தி சந்நியாசமங்களும் இதைக்குறித்துவந்த வர்பாசங்களும் சசவிஷாணவந்தியாபுத்திர ககனாரவிந்தமித்தியாபுருஷன்போலவே காலத்திரயத்திலும் தனக்கில்லை சித்தம்இதற்குச் சம்மதிவசனம்-

சுலோகம்

దేహేంద్రియమనోబుద్ధిప్రకృతిభ్యోవిలక్షణమ్। తద్వృ
త్తిసాక్షిణంవిద్యాదాత్మానంరాజవత్సదా॥ ౨౮

(இதனதுபொருள்)

தேகம் இந்திரியம் மனது புத்தி பிரகிருதி இவைகளுக்கு விலட்சணமாகியும் அவைகளின்விருத்திகளுக்குச்சாட்சியாகியும் இராசாவைப்போல வெங்குஞ்சம்பந்தமில்லாதவனாகியும் ஆத்மாவையறியவேண்டியது

என்றுஆசாரிய சுவாமிகளாத்ம போதமென்கிற கிரந்தத்தி னிரூபித்திருக்கிறாரானபடியினா லிதுவேபிரமாணசித்தம்,

காரணப்பிரகரணம்-சம்பூர்ணம்

உ

ஆறுவது

மகாகாரணப் பிரகரணம்

முதற்பிரகரணத்தில் அவித்தாமயமான காரணசரீர த்தை நியதிகளைந்தசற்காதாரமான வித்தையை நியதி களைதற்பொருட்டதன்மயமான மஹாகாரண சரீரஸ்வ ரூபநிரூபிக்கிறார்,

சுலோகம்

సచ్చిదానందస్వరూపే స్వాత్మన్యారోపితంవపుః। మ
హాకారణమేతస్య స్వరూపంతున్నిరూప్యతే॥ ௨௭

(இதனதுபொருள்)

சச்சிதானந்த ஸ்வரூபமான தன்னிடத்திலாரோபிக்க ப்பட்டது மகாகாரணசரீரம் அதனுடையஸ்வரூபமான துநிரூபிக்கப்படுகிறது

அதெப்படியென்னிற் றமோகுணப் பிரதானமானவ கங்காரதத்துவ மென்கிறகாரண சரீரம்போனபின்பு சு த்தசத்துவகுணப் பிரதானமான மகதத்துவ மென்கிற பிரத்தியகாத்மாவுக் கோமகாகாரண சரீரமென் றபேர் இக்தப்பிரத்தியகாத்துமாவென்கிற மகாகாரண சரீரத் துக்கேசித்தென்றும சைதன்ய மென்றும் போதமென்

றும் கூடஸ்தனென்றும் ஞானமென்றும் சாட்சியென்றும் திருக்கென்றும் திரிசியானுவித்தமென்றும் இவை முதலான பரியாயநாமங்களாம் இதற்குச்சம்மதி வசனம

சுலோகம்,

మాయోపాధిర్జగద్యోని స్సర్వజ్ఞత్వాదిలక్షణః। పా
రోక్ష్యశబలస్సత్యాద్యాత్మక స్తత్పదాభిధః॥ 30

(இதனதுபொருள்)

மாயோபாதிகனையுஞ் சகத்துக்குக்காரணமாயுஞ் சர்வஞ்ஞத்துவம் முதலான லட்சணங்களோடே கூடினனையும் பாரோக்ஷமாயுஞ் சபதிமாயையு மிருக்கின்றவீஸ்வரனே தத்பதார்த்தமாம்.

என்று ஆச்சரிய சுவாமிகள் வாக்கிய விருத்தியென்கிறகிரந்தத்தி னிருபித்திருக்கிறு ரானபடியினு லிதுவே பிரமாணசித்தம் பின்னுமிந்தப பிரத்தியகாத்துமாவான சாட்சியே-சாட்சியமான சகத்துருபமாய்த்தோற்றுகிறபடியினுலிந்தச் சகத்துருபமாய்த் தோற்றுகிற மகாரானசரீரமான பிரத்தியகாத் மாவுக்கே அகண்டாகாரவிருத்தியென்றும் ஆனந்த விருத்தி யென்றும் சம்பிரஞ்ஞாத சமாதியென்றும் சத்தானுவித்தமென்றும் ஓங்காரமென்றும் பிரணவமென்றும் போதாங்

குரமென்றும்தோணலென்றும்-கிராகசத்தியென்றும்சித்சத்தியென்றும்பிரதமாபாசமென்றும்பின்னும் அசங்க சச்சிதானந்தசொப்பிரகாசநித்த-சுத்தபுத்தநின்மலநிராகாரநிருபத்திரவநிர்ச்சங்கநிர்விகாரநிர்விகற்ப நிராலம்ப அகண்டாகாரத்தபரிபூரணாநந்தநித்தியாநந்த நிர்விசேஷானந்தஸ்வரூபபாவமென்கிற சத்தானுவித்தசவிகற்பசமாதியென்றும் இவைமுதலாய்மகத்தானபரியாய நாமங்களாம இதற்குச்சம்மதிவசனம்.

சுலோகம்.

ఏకంబ్రహ్మచిదాకాశంసర్వాత్మకమఖండితం। నిరంతరంనిరాకార మితిభావయరాఘవ॥ ౩౧

இதனதுபொருள்.

சிதாகாச ஸ்வரூபமாகியும்-சர்வஸ்வரூபமாகியும்- அகண்டாகாரமாகியும்-நிரந்தரமாகியும்- நிராகாரமாகியும் ஏகமாகியுமிருக்கின்ற பிரமத்தைப் பாவனம்பண்ணும்,

என்று வாசிட்ட ராமாயணமென்கிற கிரந்தத்தில்ஸ்ரீராமனைப்பார்த்து-வசிட்டருபதேசம்பண்ணியிருக்கிறாரானபடியினாலும் சுருதிகளிற் சொல்லப்பட்டிருக்கிறபடியினாலும்-இதுவே பிரமாணசித்தம்.

இவைமுதலானவியஷ்டி-சமஷ்டி அகண்டாகாரவிருத்திகளுடைய பரியாய நாமங்களோடே கூடியிருக்கிற மேசமூலப்பிரகிருதியென்கிற மகாகாரணசரீரம்- தன்னி

டத்திலத்தியஸ்தமாய்த்தோற்றுகிற விந்த மகாகாரண
சரீரந்தானல்ல-அதெப்படி தானல்லவென்றால்- தாஞ்
ஞிம்பூதாவத்தையி லிந்தமகா காரணசரீர மில்லாமற்
போனாலுந் நானென்கிறபிரதீதி யில்லாமற்குறைவிருக்
கிறபடியினாலிந்த மகாகாரணசரீரந்தானல்ல- இந்தமகா
காரணசரீரத்தின் பேரிலத்தியஸ்தமாய்த்தோற்றுகிற ச
ர்வஞ்ஞனென்றும்-திரிகாலவேதியென்றும்-தானேசர்வ
மென்றுந்தன்னுடைய கற்பனையே சகத்தென்றுந் தன்
னிடத்திற்சகத்துற்பத்தி ஸ்திதி-சங்காரங்களாகிறதென்
றும்-தானே சகத்துக்குக்காரணமென்றும் தானேசர்வ
சத்திவந்தனென்றும்-தானேசர்வசத்திலுமநுசூதமாயி
ருக்கிறவனென்றும் தானேசுவர்க்க மத்தியபாதாள-பிர
மலோகாதி சகலலோகங்களிலு மிருக்கிறபேர்களுடை
யவிர்த்தாந்தங்களெல்லாந் தெரிகிறவனென்றும்-மென்னு
ந்தனக்குத்துரியாவத்தையென்றும்- மூர்த்தன்யஸ்தான
மென்றும்-ஆனந்தபோகமென்றும்-பீந்துவென்றும்- இ
ந்தமகாகாரணசரீரத்தைக் குறித்துச்சொல்லப்பட்ட சத்
த சாஸ்திரம் - தர்க்க சாஸ்திரம் மீமாம்ச சாஸ்திரம்
யோக சாஸ்திரம் வேதாந்த சாஸ்திர மிவைமுதலிய
சகல சாஸ்திரங்களும் இந்தச் சாஸ்திரங்களுக்கேதுவா
ன சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி - வாக்கென்

கிறதும் - இவைமுதலான சகலாத்தியாசங்களும் சசவிஷாணவந்தியாபுத்திர-ககனாரவிந்த - மித்தியாபுருஷன்போலவே-காலத்திரயத்திலுந்தனக்கில்லை - இப்படித்தன்னிடத்தில ஸத்தியஸ்தமாய்த் தோற்றுகிற இந்தச்சாட்சித்துவமென்கிற மகாகாரணசரீரமே சாட்சியமென்னப்பட்ட பிரபஞ்சத்தைக்குறித்துவந்தது ஆனபடியினாலிந்தச் சாட்சியமாயிருக்கப்பட்ட பிரபஞ்சங் காலத்திரயத்திலுந் தன்னிடத்திலில்லை ஆனபடியினாலிந்தச்சாட்சியத்தைக் குறித்துவந்த சாட்சித்துவமென்கிற மகாகாரணசரீரமும் இதனிடத்திலத்தியஸ்தமாய்த்தோற்றுகிற சர்வஞ்ஞத்துவாதிநாமங்களும்-இதைக்குறித்துவந்த ஆபாசத்துவமும்-சசவிஷாண-வந்தியாபுத்திர-ககனாரவிந்த-மித்தியாபுருஷன்போலவே காலத்திரயத்திலுந்தனக்கில்லை-ஆனபடியினாலிந்தச் சாட்சி சாட்சியரகிதமாய்நினைப்புமறைப்பில்லாமல் தியானத்தியேயமில்லாமல் தூஷ்ணீம் பூதனாயிருக்கப்பட்ட சுகஸ்வரூபங் குருவாக்கியத்திறனென்றறிந்துநின்றதே மூலப்பிரகிருதி ரகிதமான தன்னுடையஸ்வரூபம் இதற்குத்திருஷ்டாந்தம் ஆறுகடந்து பத்துபேர்போகச்சே அந்தப்பத்துபேர் கணக்காளியான வொருவன்மற்றவொன்பதுபேரையுமெண்ணிதன்னையெண்ணமற் பத்தாவான்றனாயிருந்தத்தன்

ளைப்பத்தவானென் றறியாமற் போனதே அதிஷ்டான ஞ்ஞானமான மூலப்பிரகிருதி ஆபத்தாக்கியத்தினற் பத்தாவான்றனென்றறிந்துநின்றதே மூலப்பிரகிருதிசகிதமானதன்னுடைய ஸ்வரூபம் இதற்குச் சம்மதிவசனம்·

ஞானஞ்சுளுவுமாம்-பளுவுமாம்-அதெப்படியென்னில்-தானென்றறிந்த அறிவுதானெனச் சுளு அதுதானன்றென்கிறமதியே-பளுவென்று லோககுருவாயிருக்கப்பட்ட வேத வியாசபகவான் ஸ்ரீராமஸ்தவராசமென்கிற கிரந்தத்திலிருந்திருக்கிறபடியினாலும்- அறிந்தேனென்கிறதினைப்பும்-அறியேனென்கிறமறைப்பும் இவ்விரண்டுமின்றியிருந்திருந்தே நிரதிசயானந்தமென்ற-அவதூதகீதையில் தத்தாத்திரய யோகீஸ்வரர் ளிருப்பித்திருக்கிறபடியினாலும்-ஆசிரியர்-சீடன் இவர்களுடைய பிரசினோத்தரம் ஆலம்பழத்தைக்கொண்டுவா ஸ்வாமி இதோ கொண்டுவந்தேன்-அதைப்பிள-பிளந்தேன்- அதிலென்னகண்டாய்-ஒன்றுங்காணவில்லை பரமாணுக்களைக்கண்டேன் - அப்பரமாணுக்களி லொன்றைப் பிள - பிளந்தேன் அதிலென்ன கண்டாய் ஒன்றுங் காணவில்லை இப்படிக்கொற்ற அணுவானவிதையில் இலை-பணை-விழுதுபொந்துகள் முதலானவிகாரங்களோடுகூடிய ஆலமர

மானது எப்படி அடங்கியிருந்ததோ அப்படியேயுன்னிடத்திலுமரூபமான பிரபஞ்சமுமடங்கி யிருக்கின்றது.

என்றுசாந்தோக்கிய வுபநிடதத்திற் சொல்லியிருக்கிறபடியினாலும்-இதுவேபிரமாண சித்தம்.

மகாகாரணப்பிரகரணஞ்

சம்பூரணம்.

உ

ஏழாவது

நிசானந்தானுபூதிப்பிரகரணம்.

முற்பிரகரணத்தில்-வித்தியாரூபமான மஹாகாரண சரீரத்தைனியதிகளைந்திவைகட்காதாரமானசச்சிதானந்த வொருமையினுள்ள னிரதிசயானந்த வனுபவமாம் பொருட்டதற்கங்கமான நிசானந்தானுபூதி பிரகரணநிரூபிக்கிறார்;

சுலோகம்.

సచ్చిదానందస్వరూపే స్వాత్మన్యవ్యాహృతసరస్వతి। సతి
ముక్తిశ్చాస్వతిరా తత్స్వరూపానురూపస్యతే॥ ౩౧

இதனதுபொருள்.

சச்சிதானந்தஸ்வரூபமான ஆத்மாவென்னும் அமிர்தசாகரத்தில்-னித்தியசாஸ்வதமான முத்தியிருக்கிறது அதினுடையஸ்வரூபமானது னிரூபிக்கப் படுகிறது.

அஃதாவது மூலப்பிரகிருதிரகிதமான தன்னுடைய ஸ்வரூபவர்ன நியகாமங்களைப்படியென்னில் சத்தே சுயத்தோன்றுகிறபடியினாற்-சித்தாச்சு-சித்தேசுயமாயிருக்கிறபடியாற் சத்தாச்சு இதந்திரண்டாய்வஸ்துவில்லாதபடியினு லானந்தமாச்சு ஆகச்சே சச்சிதானந்தஸ்வரூபமாய்-அகண்டானந்தஸ்வரூபமாய்பரிபூரணானந்தஸ்வரூபமாய்-நித்தியானந்தஸ்வரூபமாய்- நிர்விசேஷானந்தஸ்வரூபமாய்நிருப நிருயத்திரவ-நின்மலநிரவயவனிரந்தக-நித்திய னிராகாரனியித்தநிஷ்கர்ம நிச்சங்கநிரவிநிராஸ்வரூபமாய் நிர்க்குணனிஷ்கிரிய நிர்விகற்ப நிரஞ்சன நிர்லட்சியனிராலம்ப னிரதிசயாமுந்தஸ் லனபமாய்நிசனிர்லேப வாணநிச்சசிந்திய நிர்வசருநிரூபானந்தஸ்வரூபமாய் நிர்வேத்தியநிச்சல நிசேடிநிர்ச்சத்தநிர்ச்சீவ நிர்ச்சலானந்த ஸ்வரூபமாய்நிற்ப்பின்ன-நிர்ப்போத-நிர்நாமநிர்வியாச்சியராப்பாவ நிஷ்பிரபஞ்சஸ்வரூபமாய்அச்சேத்திய அச்சிலேக்திய அசோசிஷ்ய அதாகிய அகிராகியஆதியந்தரகிதானந்தஸ்வரூபமாய்அசஷர-அமலஅப

பிரமேய-அநாசிரிய-ஆனந்தகந்தஸ்வரூபமாய்-அநாதார-அமிர்த-அவிதர்க்கிய-அநாமய-அதிரிசிய அத்துவிதானந்தஸ்வரூபமாய்-அபாகிய-அக்ஷணிய-அபாசிய-அநிர்வாச்சிய-அதிந்திரிய-அபோத்[illegible]-அருணிய அக்குரோத-அபரோக்ஷானந்தஸ்வரூபமாய் இவைமுதலான தன்ஸ்வரூபத்தினுடையவர்ன நீயர்ப்பங்களாம்- இதற்குச் சம்மதிவசனம்.

சுலோகம்,

నిర్గుణో నిష్క్రియో నిత్యో నిర్వికల్పో నిరంజనః। నిర్వి
కారో నిరాకారో నిత్యముక్తోస్మి నిర్మలః॥ 33

இதனதுபொருள்.

ஒரு குணமுமில்லாதவனாய் ஒருகர்மமில்லாதவனாய் ஒருவிகற்பமுமில்லாதவனாய்-ஒருமானமுமில்லாதவனாய்ஒரு விகாரமுமில்லாதவனாய் ஒருருவங்களுமில்லாதவனாய் நித்தியமுத்தனாயிருக்கிறேன்.

இப்படி ஆசாரியசுவாமிகளாத்மபோதமென்கிறகிரந்தத்திலிருபித்திருக்கிறானபடியினாலும் வேதசாஸ்திரங்களிற் சொல்லியிருக்கிறபடியினாலும் இதுவேபிராமாணசித்தம்.

இந்தஸ்வரூபத்தினுடைய வர்ணனீயநாமங்கள்பிரபஞ்சத்தைககுறித்து வந்ததேயல்லாமல் வேறல்ல அதெப்படியென்னில் அசத்தைக்குறித்துச் சத்தென்றும்-சடத்தைக்குறித்துச்சித்தெ றும்-துக்கத்தைக்குறித்து ஆனந்தமென்றும்-சகுணத்தைக்குறித்துநிற்குணமென்றும்-ஆபரணத்தைக்குறித்து நிராவரணமென்றும்-சாகரத்தைக்குறித்து நிராகாரணமென்றும்- விஷயானந்தத்தைக்குறித்து னிர்விஷ்யானந்தமென்றும்-பேதத்தைககுறித்துஅபேதமென்றும்-பரோக்ஷத்தைக்குறித்து அபரோக்ஷமென்றும்-தொய்தத்தைக்குறித்து அத்தொய்தமென்றும விகாரத்தைக்குறித்து நிர்விகாரமென்றும்அவலம்பத்தைக்குறித்து-நிராலம்பமென்றும-சங்கத்தைக்குறித்துநிர்ச்சங்கமென்றும் அப்பிரகாசத்தைக்குறித்துப்பிரகாசமென்றும்-கண்டத்தைக்குறித்து அகண்டமென்றும்-நாமத்தைக்குறித்து நிர்நாமமென்றும்-சூனியத்தைக்குறித்துப் பூரணமென்றும்-வாச்யத்தைக்குறித்து அநிர்வாச்சியமென்றும்-சத்தத்தைக்குறித்து நிர்ச்சத்தமென்றும்-அஞ்சனத்தைக்குறித்து நிரஞ்சனமென்றும்-வேத்தியத்தைக்குறித்துநிர்வேத்தியமென்றும்-சலனத்தைக்குறித்து நிர்ச்சலவமென்றும் மிரதத்தைக்குறித்து அமிர்தமென்றும்-ஆதியந்தசகிதத்தைக்குறித்து ஆதியந்தரகிதமென்றும் பிரபஞ்சத்தைக்குறித்து நிஷ்பிரப

ஞ்சமென்றும், சித்தனிரோதத்தைக்குறித்துயோகமெ
ன்றும்-லட்சியத்தைக்குறித்து னிர்லட்சிய மென்றும்
பெயர்களாம்-பின்னுஞ் சர்வம் பிரமமென்றுஞ் சர்வஞ்
சூனியமென்றும். இவைமுதலான தன் ஸ்வரூபத்தினு
டைய வர்ணனீய நாமங்கள் பிரபஞ்சத்தைக்குறித்து அ
த்தியாசமாய்த் தோற்றிற்றே யில்லாமற் சுதாயிந்தநாம
ங்கள் சசவிஷாணை வந்தியா புத்திர ககனாரவிந்தமித்தி
யாபுருஷன்போலவே காலத்திரயத்திலுந் தனக்கில்லை-
யென்பதுவினால் பேதா பேதரகிதமாய்ப் புண்ணியா பு
ண்ணிய ரகிதமாய்த்தொய்தாத்தெய்தரகிதமாய் பாவா
பாவ ரகிதமாய் ஞானஞ்ஞான ரகிதமாம் காரிய கார
ண ரகிதமாய், மாயாமோகரகிதமாய்பந்தமோக்ஷ ரகித
மாய், சுக துக்கரகிதமாய், காமியாகாமியரகிதமாய், கம்
மியா கம்மியரகிதமாய். சநநமரணரகிதமாய், விருத்தி
யக்ஷரகிதமாய், உதயாஸ்தமனரகிதமாய், திவாராத்திர
ரகிதமாய், இவைமுதலாயிருக்கப்பட்ட தொந்தரகிதமா
ய் தூஷ்ணீம்பூதஞ்சிருக்கப்பட்ட தன்னுடைய ஸ்வரூ
பத்தில் அதிஷ்டானஞ் ஞானமென்கிற ஆவரணமான
மூலப்பிரகிருதியும் விசேஷகாரணமானமகதத்துமக்
அகங்கார தத்துவம்-பஞ்சதன்மாத்திரை- சூட்சுமதூலாதிப்
பிரபஞ்ச மெப்படித்தோற்றுகிற தென்றால்; திருஷ்டா
ந்த பூர்வகமாய்நிரூபிக்கிறோம்.

அந்தத் திருஷ்டாந்த மென்னவென்றால் மூலப்பிரகி ருதியென்கிற மித்யாபுருஷனிடத்தில் அகங்கார தத்து வமென்கிற இல்லாத சித்திரக்கோற்கையிற் பிடித்துக் கொண்டு பஞ்சதன்மாத்திரை யென்கிற இல்லாத பரு சவன்னங்களினற் றூலசூட்சமமென்கிற பொய்யானவை சித்திரத்தைச் சூனியமென்கிற வாகா சத்திலெழுதினை ற்போல விருக்கிறதென்று வசிட்டபகவான் வாசிட்டமெ ன்கிற கிரந்தத்தி னிரூபித்திருக்கிறா ரானபடியினாலி ந்த தூஷ்ணீம் பூதனாயிருக்கப்பட்ட தன்னுடைய ஸ்வ ரூபத்தில் அதிஷ்டானஞ்ஞானமான ஆவரணமென்கி ற மூலப்பிரகிருதியும் விக்ஷேபகாரணமான மகத்துவ மகங்காரதத்துவமும் பஞ்சதன்மாத்திரை சூட்சுமதூல ப்பிரபஞ்சமும் சாக்கிர சொப்பன சுழுத்தி துரியாவஸ் தைகளும் விசுவதைசதபிராஞ்ஞாபிரத்தியக்கு சைத ன்னியமும்-விராட்டு இரணியகர்ப்ப அவ்வியா கிருதச ருவசாட்சித்துவம் ராசசதாமசசத்துவமான சுத்தசத்து வமான சுத்த சத்துவகுணங்களும் யுத்தபரியுத்த ஆன ந்த ஆத்மானந்த போகங்களும். சிற்சத்தி-பராசத்தி-ஆ திசத்தி இச்சாசத்தி கிரியாசத்திகளும் பிரமா-விஷ்ணு -ருத்திரன்-மஹேஸ்வர-சதாசிவ மூர்த்திகளும் நேத்தி ரம-கண்டம்-இருதயம்-மூர்த்தன்னிய ஸ்தானங்களும். அகார உகாரமகாரபிந்துமாத்திரைகளும் இதைச்சூழ்

த்துவந்த அத்யாச நாமங்களும் - இத்தைக்குறித்துச் சொல்லப்பட்ட சாஸ்திரங்களும் இத்தைக்குறித்து வந்த ஞபாசநகளும்-இதைக்குறித்துவந்த ஸ்வரூபவர்ணநீயநாமங்களும். இந்த ஸ்வரூபவர்ணநீயமாய் பிரதிபாதிக்கிற மகாவாக்கியங்களை யுபதேசம் பண்ணிக் கொண்ட சீடர்களும் இந்தச் சீடனைக்குறித் துபதேசம் பண்ணின சற்குருக்களும்-இந்தச் சற்குருக்களுடைய வுபதேசங்களும் இந்த வுபதேசத்தினால்வந்தசிரவண மனந நிதிதியாசனங்களும், சர்மமபக்தி வைராக்கியம்- யோகத் தியானங்களும் சாம்பவிமுத்திரை கேசரிமுத்திரை அமனஸ்கமுத்திரை மவுனமுத்திரைகளும். இந்தப்பிரபஞ்சம் அஞ்ஞானத்தினாற் றோற்றிற்றென்றும் ஞானத்தினாலில்லாமற்போச்சுதென்றும் யோகத்தினாற்றன்னைத்தான் பார்க்கவேணுமென்றும். ஞானத்தினாற் றன்னைத் தானறிய வேண்டு மென்றும். இப்போ தறிந்துகொண்டேனென்றும்-இவைமுதலான சகல சங்கற்பப் பிராந்திகளும் மருமரீசிகையினிடத்திற் சலங்காலத் திரயத்திலு மெப்படியில்லையோ சுத்தனிடத்தில் ரசிதங் காலத்திரயத்திலு மெப்படியில்லையோ ரச்சுவினிடத்திற் சர்ப்பங் காலத்திரயத்திலு மெப்படி யில்லையோ அப்படியே அதிஷ்டானஞ்ஞான மென்கிற மூலப்பிரகிருதிமுதலான சகல பிராந்திகளும் நிசானந்தானுபூதிஸ்வரூபமாய் ...

ந்தியாபுத்திர சசுறாவிந்தபித்தியாட ருஷன் போலவே காலத்திரயத்திலு மில்லை இதறகுச் சம்மதிவசுனம்.

சுலோகம்.

సర్వశూన్యం మశూన్యం సత్యాసత్యం న విద్యతే। స్వభావభావితం ప్రోక్తం శాస్త్రసంపత్తిపూర్వకం॥ ౩౮॥

இதனதுபொருள்.

சாஸ்திர சம்புத்தி பூர்வமாக ஸ்வரூபத்தைப்பாவிக்கின்ற எல்லாஞ்சூனியமாய் மனது சூனியமாய்ச் சத்தியா சத்தியுக்க மில்லாமற் பூரணமாயிருக்கிற தென்று சொல்லப்படுகிறது.

சுலோகம்,

విద్యం తేన చ విద్యం తే కథం కస్య ప్రవర్తతే। సచ సర్వమసర్వం చ ఆత్మైవ హి సకేవలః॥

(இதனதுபொருள்.)

லயிக்கிறதும் லயிக்காததுமாயிருக்கிற பிரபஞ்சமெனுக் கெவ்விதமாகப் பிரவர்த்திச் சிருக்கிறது எல்லாமுண்டாயிருக்கிறது முண்டாகவுமில்லை-எல்லா ஆத்மஸ்ரூபமேயிருக்கிறதென்று தத்தாத்திரய யோகீஸ்வரர் சுவனுத கீதையென்கிற கிரந்தத்தி னிருபித்திருக்கிறபடியினாலும்.

சுலோகம்.

అవ్యక్తో౽యమచింత్యో౽యమవికార్యో౽యముచ్యతే॥ ౩౬॥

(இதனது பொருள்.)

இவ்வாத்மா அவ்வியக்தன் - இவன் - சிந்தியன் - இவன் அவிகாரியனெனச் சொல்லப்படுவனென்று கீதையிற் பகவா னிருபித்திருக்கிறபடியினாலும்.

சுலோகம்

క్వప్రవృత్తిర్నివృత్తిర్వా క్వముక్తిః క్వచబంధనం। కూటస్థనిర్వికారస్య స్వస్థస్య సుఖసాధనా॥ ౩౭॥

(இதனதுபொருள்)

நிர்விகாரியானகூடஸ்தனிடத்தில் எப்போதுஞ் சொஸ்தனாயிருக்கிற வெனக்குப் பிரவிர்த்தி யெங்கே னிவிர்த்தியெங்கே-முத்தியெங்கே - பந்தமெங்கே என்றஷ்டவக்கிர கீதையி னிருபித்திருக்கிறபடியினாலும்,

சுலோகம்,

అమనస్త్వాత్సుఖదుఃఖరాగద్వేషభయాదయః। అహంకారస్య నాశ్యంతే బుద్ధ్యాత్మజ్ఞానసాధనాత్॥ ౩౮॥

அப்பிராணனென்றும்-அமனஸ்தனென்றும்-சுப்பிரனென்றும்-வேதஞ்சொல்லுகிறபடியே - எனக்குமனதில்லாதபடியினால் துக்கமும்-ராகமும் - துவேஷமும்-பயமுங்கிடையாதென்று ஆத்மபோதமெய்கிறகிரந்தத்தில்-ஆசாரியசுவாமிகனிரூபிக்கிறபடியினாலும்.

சுலோகம்

ప్రశాంతవృత్తికంచిత్తంపరమానందదాయకం। అసంప్రజ్ఞాతనామాయంసమాధిర్యోగినాంప్రియః॥ ౩౯

(இதனதுபொருள்)

சகல சங்கற்பங்களும் உபசாந்தியடைந்து பரமானந்த மேலிட்டால்-அசம்பிரஞ்ஞாதசமாதியென்றுபேர்,

சுலோகம்,

స్వానుభూతిరసావేశాద్దృశ్యశబ్దావనపేక్షితౌ। నిర్వికల్పసమాధిస్స్యాన్నివాతస్థలదీపవత్॥ ౪౦

இதனதுபொருள்.

சுவானுபத்மென்கிற வமிர்தரசத்தினாலே சத்தாஸ்திரிசியத்தை விரும்பாதிருக்கின் னிவாதஸ்தலதீபம்போல் விருப்பதே னிசசலமான னிர்விகற்ப சமாதி என்று வித்யாரண்ய சுவாமிக னிரூபித்திருக்கிறபடியினாலும்,

சுலோகம்

సంశాంతసర్వసంకల్పాయాశిలావదవస్థి - జాడ్యని
ద్రావినిర్ముక్తాసాస్వరూపస్థితిఃపరా। ౪౧

(இதனதுபொருள்)

சகல சங்கற்பங்களும் உபசாந்தமாய்ச் சாட்டி யனுத்தி
னை நீங்கச் சிலையைப்போல் னிச்சலமா யிருப்பது உ
த்தமமான ஸ்வரூபஸ்திதியென்று விசிட்டபகவான் வா
சிட்டமென்கிற கிரந்தத்தி னிருபித்திக்கிறபடி யினாலும்
வேதாந்தானுபவமறிந்த பெரியோர்களுக்கு எதாகிலு
முண்டானு லல்லவா யில்லையெனச் சொல்ல வேண்டு
மென்று தத்தாத்திரய யோகீஸ்வரர் பூரணானந்தபோ
தமென்கிற கிரந்தத்தி னிருபித்திருக்கிற படியினாலும்.

சுலோகம்

ప్రత్యస్తమితభేదంయత్సత్తామాత్రమగోచరం-వచ
సామాత్మసంవేద్యంతద్జ్ఞానంబ్రహ్మసంజ్ఞితం। ౪౨

(இதனது பொருள்;)

பேதமிறந்ததாயும் சத்தாமாத்திர மாகியும் வாக்குக் கோசரமாகியும் தன்னாலறியத்தக்கதாயுமிருக்கின்றதெதுவோ அந்தஞானமே பிரமமெனப்பெயரை யுடையது

சிலோகம்.

విభేదజనకే జ్ఞానే నాశమాత్యంతికం గతే- ఆత్మనో బ్రహ్మణో భేదమసంతం కః కరిష్యతి॥ ౪౩

(இதனது பொருள்),

பேதத்தை யுண்டுபண்ணுகிற வஞ்ஞானமானதுமுழுது நாசமடைந்தால் ஆத்மாவுக்கும்பிரமத்துக்குமில்லாதபேதத்தையெவன்பெறச்செய்வான் - விசானந் தானுபூதிப்பிரகரணஞ் சம்பூரணம்.

சத்தப்பிரகரணம்

சம்பூரணம்.